விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii


சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 01 ஞாயிற்றுக்கிழமை (17.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 210




# சனல் 4 காணொளி பொய் என்றால்

# சர்வதேச விசாரணையை ஏற்கலாமே

## கேணல் ஹரிகரன் கூறுகிறார்



(டெல்லி)

சனல் 4 வெளியிட்ட இலங்கையின் கொலைக்களம் ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ள காணொளிகள் உண்மையானவையென சர்வதேச நிபுணர்கள் நிரூபித்துள்ளனர். எனவே அதனை இல்லை என உறுதிப்படுத்தும் பொறுப்பு இப்போது இலங்கை அரசிடமே உள்ளது.

இவ்வாறு இந்திய அமைதிப்படையின் முன்னாள் புலனாய்வுத்துறைத் தலைவர் கேணல் ஆர்.ஹரிகரன் தெரிவித்துள்ளார். சனல் 4 வெளியிட்ட காணொளித் தொடர்பில் கருத்து தெரிவித்த கேணல் ஹரிகரன் மேலும் தெரிவிக்கையில்,

சனல் 4 காணொளியினை சர்வதேச நிபுணர்கள் உண்மையென நிரூபித்துள்ளனர். எனினும் இலங்கை அரசு அதனை மறுத்து வருகிறது. (19ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டிக் கொல்லப்பட்ட பெண்ணின் சடலம்

## உறவினர்களிடம் நேற்று ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ்தியான் சந்திப்பகுதியில் நேற்று முன்தினம் வெட்டிக்கொல்லப்பட்ட கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த திருமதி அகிலா சுதாகரனின் (வயது 28) சடலம் விசாரணைகளின் பின் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அகிலாவை வெட்டி கொன்றபின் பெற்றோல் ஊற்றி தன்னைத்தானே கொளுத்திய ஹற்றனைச் சேர்ந்த என்.சத்தியன் (வயது 28) யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றில் பணியாற்றிய சத்தியன் பின்னர் புன்னாலைக்கட்டுவனில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பணிபுரிந்து வந்ததாக தெரியவருகிறது.

கொலைக்கான காரணங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-4,8)

## 2500 முன்னாள் போராளிகள் சில தினங்களில் விடுவிப்பு

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 முன்னாள் போராளிகள் இன்னும் ஒரு சில தினங்களில் சமூகத்துடன் இணைக்கப்படுவர் என புனர்வாழ்வு ஆணையாளர் செயலகத்தின் நிர்வாக இயக்குநர் கேணல் பந்துல ஜயத்திலக தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 முன்னாள் போராளிகளை சமூகத்துடன் இணைப்பதன் மூலம் இப் பணிமுற்றுப் பெறும் எனவும் அத்துடன் 8 ஆயிரம் முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார். (ந-8)

# முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு கேட்கமாட்டோம்

## நீதியின் தீர்ப்பை எதிர்பார்க்கின்றோம் - ஜயந்த எம்.பி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தொடர்பில் நீதியின் தீர்ப்பையே எதிர்பார்க்கின்றோமே தவிர பொது மன்னிப்பை அல்ல என ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தெரிவித்தார்.


இது தொடர்பாக ஜயந்த கெட்டகொட எம்.பி. மேலும் கருத்து தெரிவிக்கையில், பொன்சேகாவின் குடும்பத்தினரோ அல்லது ஜனநாயக தேசிய முன்னணியினரோ பொது மன்னிப்பை வழங்கும் கோரிக்கையை அரசாங்கத்திடம் முன்வைக்கவில்லை.

குற்றம் செய்தாலேயே பொது மன்னிப்பு கோர வேண்டும். பொன்சேகா குற்றமிழைக்கவில்லை .

நாட்டையும் மக்களையும் பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்தார். எனவே பொது மன்னிப்பு அவசியமில்லை. அவர் தொடர்பில் பக்கசார்பு அற்ற நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் (19ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 காணொளி சர்வதேச சதி

## பிரதி அமைச்சர் முரளிதரன் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

சனல் 4 காணொளித் தொகுப்பானது, இலங்கையின் அபிவிருத்தியை சகித்துக் கொள்ள முடியாத சிலரின் சூழ்ச்சியாகும் என பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிபடைந்துள்ள நிலையில் நாட்டில் வட பகுதியில் அபிவிருத்திகள் இடம்பெறுகின்ற நிலையில் இடம்பெற்று வருவதுடன் மக்கள் மகிழ்வுடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணம் முழுவதற்கும் நீர்வழங்க மாபெரும் திட்டம்

### அரசு முன்னெடுப்பதாக அமைச்சர் பசில் உரை

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிப்படைந்துள்ள உங்களது பிரதேசத்தையும், வாழ்க்கையையும் விருத்திசெய்வதற்காக வெளிநாடுகளிடம் நாம் உதவிகளை பெறச்செல்லும்போது உங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை தடுத்து விடுகின்றனர் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ (20ஆம் பக்கம் பார்க்க)



# இலங்கையில் நடந்த போர்க்குற்றம் சர்வதேச விசாரணைகள் அவசியம்

## அமெ. மனித உரிமை சட்டவாளர்கள் கோரிக்கை

(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமைச் சட்டங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமெரிக்க சட்ட வகுப்பாளர்கள் மற்றும் மனித உரிமை சட்டவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சியின் இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படம் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் அமெரிக்க காங்கிரஸில் காட்சிப்படுத்தப்பட்டதை தொடர்ந்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படத்தை பார்வையிட்ட அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினரும் காங்கிரஸின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைத் தலைவர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள (19ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 காணொளி விளக்கமளிக்க ஏற்பாடு

(கொழும்பு)

சனல் 4 காணொளி, தாருஸ்மன் அறிக்கை குறித்து உலக நாடுகளுக்கு விளக்கமளிக்கப்பட உள்ளது.

சனல் 4 காணொளி மற்றும் தாருஸ்மன் அறிக்கை ஆகியன போலியானவை என்பதனை உலகின் பல முக்கிய நாடுகளுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் விசேட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கான இலங்கை தூதுவர்கள், (02ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் வர்த்தக உறவுகளை வலுப்படுத்த பாகிஸ்தான் விருப்பு

## பீரிஸிடம் பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு

இலங்கைக்கும் பாகிஸ்தானுக் குமிடையிலான அரசியல் மற்றும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப் படுத்த பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸாக் கிலானி அழைப்பு விடுத் துள்ளார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய் துள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்

இலங்கை மற்றும் பாகிஸ்தா னுக்கிடையிலான கூட்டு வர்த்தக உடன்படிக்கை எதிர்வரும் ஓகஸ்டு மாதம் கைச்சாத்திடப்படவுள்ளதாக கூறியுள்ள பாகிஸ்தான் பிரதமர் இரு நாடுகளும் கல்வி, தாதியர் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி என்பவற்றில் ஒன்றிணைந்து செயற்படுவதுடன் இரு நாடுகளுக்குமிடையிலான சீமெந்து, சீனி, மருந்து வகைகள் இரத்தினம் மற்றும் ஆபரணம் போன்றவை தொடர்பிலான வர்த்தக உறவுகள் இவ்விரு நாடுகளுக்கு இடையிலான உறவை மேலும் வலுப் படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாகிஸ்தான் நாடா ளுமன்றத்தின் சபாநாயகர் பாரூக் நயீக்கையும் வெளிவிவகார அமை ச்சர் பீரிஸ் சந்தித்து கலந்துரையா டியுள்ளார்.

இச்சந்திப்பில் பிராந்திய ரீதி யில் அமைதியையும் பாதுகாப் பையும் ஏற்படுத்திக் கொள்வதில் இலங்கை அரசாங்கத்துடன் கொ ண்டுள்ள புரிந்துணர்வை பெரிதும் மதிப்ப தாக பீரிஸிடம் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் இறை யாண்மையை பாதுகாத்துக் கொள் வதற்கு பாகிஸ்தான் முழுஒத்து ழைப் பையும் வழங்குமெனவும் இச்சந்திப்பில் அவர்குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை போன்றே பயங்க ரவாதத்தை எதிர்கொள்ளும் நாடாக பாகிஸ்தானும் இருப்ப தாகவும் இப் பயங்கரவாத நடவடி க்கைகளில் தங் களின் முக்கிய தலைவரான பெனாசீர் பூட்டோ வையும் இழந்ததாகவும் அவர் பீரிஸுக்கு கூறியுள்ளார். (ந)

# அமெரிக்காவுக்கான இந்திய தூதுவராக நிருபமா நியமனம்

இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் அமெரிக் காவுக்கான இந்தியத் தூதுவராக நேற்று அதிகார பூர்வமாக அறிவிக் கப்பட்டுள்ளார்.

இந்த புதிய பதவியை நிருபமா ராவ் விரைவில் ஏற்றுக் கொள்வார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித்தொடர் பாளர் புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவராக நிருபமா ராவை நிய மிக்க மத்திய அரசு கடந்த மாதமே ஒப்புதல் தெரிவித்திருந்தது.

2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இந்திய வெளிவிவகாரச் செயலாளராக பதவியேற்ற நிருபமா ராவ் இப்பதவியை வகிக்கும் இரண்டாவது பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.


வெளிவிவகாரச் செயலாளரின் பதவிக் காலத்தை மத்திய அரசு இரு ஆண்டுகளாக்கியதை அடுத்து அவரின் பதவிக்காலம் இந்த மாத இறுதிவரை நீடிக்கப்பட்டிருந்தது.

சீனா மற்றும் இலங்கை உள்பட பல நாடுகளுக்கான இந்தி யத் தூதுவராக நிருபமா ராவ் பணியாற்றி இருந்தமை குறிப்பிடத் தக்கது. (ந)

# சனல் 4...

உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவராலயங்களின் ஊடாக இவ்வாறு விளக்கமளிக்கப்பட உள்ளது.

காணொளி மற்றும் அறிக்கை போலியானது என்பதனை உறுதிப் படுத்துவதற்கு வெளி நாட்டு ஊட கங்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (ந)



நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான ஆடிவேல் விழா நேற்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஊர்வலமாக ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக வீரமாகாளி அம்மன் ஆலயத்தை அடைந்து அங்கி[illegible] யாழ்நகர் ஊடாக மாலை 6.30 மணிக்கு வண்ணைச் சிவன் கோவிலை வந்தடைந்ததையும் படங்களில் காணலாம்.

# வவுனியா சிறைக்கைதிகள் நேற்று முதல் உண்ணாவிரதம்

வவுனியா சிறைச்சாலையிலுள்ள அனைத்து அரசியல் கை திகளும் நேற்று முதல் உண்ணா விரதத்தில் ஈடுபட்டு வருவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித் துள்ளார்.

வவுனியா சிறைச்சாலையில் ஏற்கெனவே உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட நான்கு அரசியல் கைதி களுக்கு ஆதரவு தெரிவித்து ஏனைய அரசியல் கைதிகளும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா சிறைச்சாலை யிலுள்ள தமிழ் அரசியல் கைதி களை உடனடியாக விடுதலை செய்வதற்கான நடவடிக்கை களை துரிதமாக மேற்கொள் ளுமாறும் விடுதலை செய்யப்பட்ட தங்களை மீண்டும் கைதுசெய்யக் கூடாது எனக் கோரியும் இந்த அரசியல் கைதிகள் உண்ணா விர தத்தில் ஈடுபட்டு வருவதாகவும் ஏற்கெனவே உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட நான்கு அரசியல் கைதிகளின் உடல்நிலை மோச மாகி வருவதாக வைத்தி யர்கள் மூலம் தெரிய வருவதாகவும் சிவ சக்தி ஆனந்தன் குறிப்பிட்டார். (ந)


## உடனடி வேலைவாய்ப்பு

1. காசாளர்+ கணக்கு லிகிதர்
- 2 குணநல சான்றிதழ் உடன் அனுபவம் உள்ளவர் (ஆண்/பெண்) வேலை நேரம்-காலை 9.00-3.00 மணி, மாலை 6.00-10.00 மணி மதியம், இரவு உணவுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

2. சமையல் உதவியாளர்+ சுத்திகரிப்பாளர்
- வேலை நேரம் -காலை 7.00-இரவு 10.00 மணி மதியம், இரவு உணவுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும். (2 குணநல சான்றிதழ் அவசியம்)

நேரில் வரவும்

**கலிபோர்னியா சிற்றி ரெஸ்ரோரண்ட்**

(5374)



## சிவபார்வதி ஜோதிட நிலையம்

### பண்டித்-மஞ்சுநாத சுவாமி

**தொ.பே. இல: 077 8949044**

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சா வளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்த வர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

**சண்ஜெய உணவகம்-(மேல்மாடி)**

**414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)**

**நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை**

(5391) **கட்டணம் ரூபா 101/-**

## தேவை

யாழ். நகரிலுள்ள எமது வியாபார ஸ்தாபனத்திற்கு வேலை ஆட்கள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்க லாம்.

**தொடர்புக்கு:**
**190, 192, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P: 021 222 2669**

(5390)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சேவா லங்கா காரி யாலயத்திற்கு பின்புறமாகவும் யாழ். பல்கலைக்கழக முகாமைக் கற்கை கள் வணிக பீட புதிய கட்டிடத் தொகு திக்கு அண்மையாகவும் கலாசாலை வீதியில் 21 பரப்பு சற்சதுரக் காணி, பகுதியாகவோ முழுதாகவோ உடன் விற்பனைக் குண்டு. நடுவர்கள் வேண் டியதில்லை.

தொடர்புகளுக்கு:
077 5532402

(5392)

## கலிபோர்னியா சிற்றி ரெஸ்ரோரண்ட் (குடும்ப உணவகம்- FAMILY RESTURANT)

ரம்மியமான கிராமிய சூழலில் உங்கள் குடும்பத்தினருடன் உணவ ருந்தி மகிழ்ந்திட

1. சைனிஸ் (Chinies)
2. சிக்கன் பிறைட் ரைஸ்/சொப்சி ரைஸ்

போன்ற உணவுகளுடன்
ஸ்பெஷல் கொத்து, இறால், கணவாய், சிக்கன் போன்ற கொத்துக்கள்.
(மாடு, பன்றி போன்ற உணவுகளற்றது)

**CALIFORNIA CITY RESTURANT**

**கலிபோர்னியா சிற்றி ரெஸ்ரோரண்ட்**

இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு சந்திக்கருகில், கோண்டாவில்.
T.P: 077 4710002

(5374)


## மரண அறிவித்தல்

### திருமதி வஸ்தியாம்பிள்ளை மரியம்மா



சென் பீற்றர்ஸ் வீதி, நவாலி தெற்கை பிறப்பிடமா கவும், வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை மரியம்மா நேற்று (16.07.2011) சனிக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுரு வஸ்தியாம்பிள்ளை யின் அன்பு மனைவியும், அருளானந்தம், அருளம்மா, ஞானராசா, ஜெனோவா, றீற்றா, காலஞ்சென்ற ஞான சீலன் மற்றும் றோசாமலர் ஆகியோரின் அன்புத் தாயா ரும், செபமாலை, றஞ்சி, A.V.மரியதாஸ், மரியநாயகம், செல்வராசா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நிகழ்வுகள் இன்று (17.07.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி கல்லுண்டாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

**தகவல்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

(சு-3789)

# இந்திய அரசினால் 40ஆங்கில ஆசிரியர்களுக்கு புலமைப்பரிசில்

(கொழும்பு)

ஆங்கிலப் பேச்சு மொழியைக் கற்பிக்கும் முறையையும் பாடநெறிகளின் உள்ளடக்கத்தையும் அறிமுகப்படுத்துவதற்கு **ஆங்கிலமும் தகவல் தொழில்நுட்பமும்** தொடர்பான ஜனாதிபதி செயலணி மேற்கொள்கின்ற முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கும் முகமாக இந்திய அரசு ஜதராபாத்தின் ஆங்கில மற்றும் வெளிநாட்டு மொழிகள் பல்கலைக்கழகத்தில் 40 புலமைப்பரிசில்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

45வயதுக்கு குறைந்த ஆங்கில மொழியை ஒரு பாடமாக பெற்றுள்ள பட்டம் பெற்ற அரசாங்க பாடசாலைகளின் ஆசிரியர்கள், சேவையில் ஈடுபட்டுள்ள ஆலோசகர்கள், பிராந்திய ஆங்கில மொழி உதவி நிலையங்களில் பயிற்சி பெற்ற பணியாட்கள் ஆகியோர் இப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும்.

குறித்த விண்ணப்ப படிவத்தை ஜனாதிபதி அலுவலகத்தில் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில்(www.president.gov.lk) அல்லது கல்வியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.moe.gov.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வி அமைச்சினால் நடத்தப்படுகின்ற நேர்முக பரீட்சையின் மூலம் சம்பந்தப்பட்ட புலமைப் பரிசில் பெறுவோர் தெரிவு செய்யப்படுகின்ற அதே நேரத்தில் பயிற்சி பெற்ற தன் பின்னர் **வாழ்க்கைக்கு திறனாக ஆங்கிலம்** என்ற நிகழ்ச்சி திட்டத்தின் சேவைகளின் தேவைக்கேற்ப இலங்கையின் ஆசிரியர் நிலையங்களில் ஏதாவது ஒரு நிலையத்துடன் இணைவதற்கு சம்பந்தப்பட்ட பயிற்சி பெறுநர்கள் உடன்பட வேண்டும்.

குறித்த விண்ணப்பப்படிவத்தை கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜனாதிபதி நிகழ்ச்சி திட்ட சுறு,4ஆவது மாடி,கல்வி அமைச்சு, இசுறுபாய என்ற முகவரிக்கு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

(ஸ்ரீ-2)

## விழிவெண்படல குறைபாடுடையவர்களுக்கு இலவச சத்திர சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஜப்பானிய அம்டா நிறுவன உதவியுடன் விழிவெண்படல குறைபாடுடைய நோயாளர்களுக்கு ஓகஸ்ட் மாத முதல் வாரத்தில் இலவச சத்திர சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது.

இம் முகாமிற்கு நோயாளர்களைத் தெரிவு செய்யும் கிளினிக் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

இச்சத்திர சிகிச்சையை மேற்கொள்ள விரும்பும் நோயாளர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8 மணிக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சமூகம் தருமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இக் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு குருதிக் கொடையாளிகள் குருதியினை வழங்கி ஒத்துழைப்பு தருமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர். இதற்கு முன்னர் குருதி வழங்கி 4 மாதங்கள் பூர்த்தியானவர்களும் புதிதாக குருதியினை வழங்க விரும்புவோர்களும் குருதியினை வழங்க முடியுமென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ)

## நாயன்மார் நால்வர் எழுந்தருளல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டு மக்களின் நலம் வேண்டிப் பிரார்த்தித்து யாழ்.குடாநாட்டு ஆலயங்கள் தோறும் நாயன் மார் நால்வரை எழுந்தருளச் செய்து மாதம் ஒருகோயில் மாதம் ஒரு திருமுறை முற் றோதலென பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருவது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை நாயன்மார் நால்வர் கொக்குவில் கிருபாகர ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் எழுந்தருளி தினமும் காலை 6 மணி பூசையுடன் நான்காம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அடியார்கள் தினமும் பங்குபற்றி பயன் பெறுமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

## இராசி பலன்

17.07.2011
(ஆடி, 01 ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
துதியை பிற்பகல் 1.06 மணிவரை
திருவோணம் முற்பகல்11.36 மணிவரை
இராகுகாலம் 4.30-6.00மணிவரை
சுபநேரம் 9.00-10.30மணிவரை
ஆடிப்பிறப்பு

**மேடம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** தந்தை வழி உறவினர்களின் வருகையுண்டு, மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், சுபகாரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** ஆதவன் வழிபாட்டால் சுகம்காண வேண்டிய நாள், உடல்நலனில் கூடிய கவனம் தேவை, தொழிலில் கூட்டாளிகள் விலகும் சூழ்நிலை உருவாகலாம்.

**கடகம்** வருமானம் திருப்தி தரும், குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வதில் மகிழ்ச்சி காணலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, கணவன்-மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**சிங்கம்** கடன் சுமை குறையும், புதிய வழிவகையைக் கையாள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழில் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** இனிமையான நாள், பிள்ளைகளால் பெருமை சேரும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், நண்பர்கள் உதவ முன்வருவர்.

**துலாம்** அன்பு நண்பர்களின் சந்திப்புக் கிட்டலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மகிழ்ச்சிக்குரிய செய்திகள் வ்ந்து சேரலாம், ஆனந்தமான நாள்.

**விருச்சிகம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரும் வருமானம் திருப்தி தரும், பிரயாண அனுகூலமுண்டு, சுவாரஸ்யமான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு** குடும்பத்தில் குதூகலமான நிகழ்வுகள் நடைபெறலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கௌரவமான நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** சிந்தனை மிகுதியுண்டு, வியாபார நலன் கருதி புதிய மனிதர்களை சந்திக்கச் செல்வீர்கள், திடீர்ப் பயணங்கள் இடம்பெறலாம், தெய்வ சிந்தனை மேலோங்கும்.

**கும்பம்** சுபவிரயம் ஏற்படும் நாள், கடன் வாங்கும் சூழ்நிலை அமையலாம், மகிழ்ச்சிகரமான பயணம் ஒன்று இடம்பெறலாம், சயன சுகக் குறைவுண்டு.

**மீனம்** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும், போசன சுகமுண்டு.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### கைவசம் ஒரு கலை

"ஆ...! ஈ...!ஊ...! "

"அரிச்சுவடி படிக்கிறீங்களா?"

"இல்லை... கராத்தே கற்றுக்கொள்கின்றேன்"

"கற்றுக்கொள்ளுங்கள்... கைவசம் ஒரு கலை இருக்கிறது நல்லது தான்! "

"கையையே ஆயுதமாக உபயோகப்படுத்தக்கூடிய இந்தக் கலையை கண்டுபிடித்தவர் உண்மையிலேயே பெரிய ஆள்தான் சேர்"

"அவர் யாரென்று நினைக்கிறீர்கள்...?எங்களுடைய ஆள்தான்! இந்தியர்! போதிதர்மா என்ற புத்தபிக்கு! ஆறாம் நூற்றாண்டிலேயே சீனாவுக்குப் போய் தங்கிவிட்டாராம். அவர் இறந்ததற்கு பின்னர் இந்தக் கலையைப் பற்றி யாரும் கவலைப்படவில்லையாம்! பதினாறாம் நூற்றாண்டிலேயே ஜிச்சின் ஃபினசோஷி- என்பவர்தான் இந்த கலையை பிரபலப்படுத்தினாராம். 1916 ஆம் ஆண்டு பலபேருக்கு முன்பு இதுதான் கராத்தே என்று செய்து காட்டினாராம். கராத்தே என்று பெயர் வைத்தவரும் அவர்தான். அதற்குப் பின்னர் முதல் உலக கராத்தே போட்டி 1970 இலே பாரீசிலே நடந்ததாம்! "

"நான் அதுமாதிரி எல்லாம் போட்டியிலே கலந்து கொள்வதற்காக காராத்தே கற்றுக் கொள்ளவில்லை சேர்!"

"பின்னர்?"

"ஹி... உங்களிடம் சொல்வதற்கு என்ன ..கொஞ்சம் கிட்டே வாருங்கள்...?"

"ம் சொல்லுங்கள்"

"அடுத்த மாதம் எனக்குத் திருமணம்... வரப்போகிற பெண்ணுக்கு கராத்தே தெரியுமாம்! அதனால் ஒரு தற்பாதுகாப்புக்காக நானும் இதை கற்றுக் கொள்கின்றேன்...!இருந்தாலும் இது ஓ்ரளவுக்குத்தான் எனக்குக் கைகொடுக்கும் என நினைக்கிறேன்!"

"எப்படி"

"இந்த கராத்தே கலையிலே கையை மட்டும்தானே ஆயுதமாக உபயோகப்படுத்தவேண்டும்..."

"ஆமாம்!"

"ஆனா... அந்தப் பெண் அப்பப்ப இன்னொரு ஆயுதம் உபயோகிப்பதாகக் கேள்வி..."

"எதை?"

"பல்லை"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 70 |
| தக்காளி | 40 | 45 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 |
| கோவா | 40 | 70 |
| கரட் | 60 | 75 |
| பூசணி | 25 | 30 |
| புடோல் | 40 | 35 |
| வாழைக்காய் | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 75 | 110 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 |
| பாகற்காய் | 70 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 50 |
| கரணைக்கிழங்கு | -- | -- |
| பயற்றங்காய் | 120 | 100 |
| லீக்ஸ் | 50 | 60 |
| பீற்றூட் | -- | 60 |
| கறிமிளகாய் | 70 | 70 |
| முருங்கைக்காய் | 90-100 | 130 |
| போஞ்சி | 90 | 120 |
| கத்தரி தம்புள்ள | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 10-15 | 10 |
| தேசிக்காய் | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 |

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

மீண்டும் காப்புறுதியின்

# பெரிய போனஸ்

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
ஆயுள் காப்புறுதியாளர்களுக்கு
ரூ. 340 கோடி



**ஹமீட் சபுர்தீன்**
வர்த்தகர்

"எனது ஆயுள் காப்புறுதியிற்கு ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸினை தெரிவு செய்யக் காரணம் சாதாரண தவணைக்கு அதிகபட்ச அனுகூலம் மற்றும் பாதுகாப்பு கிடைப்பதால் ஆகும். உண்மையில் வாழ்க்கையில் நான் எடுத்த சிறந்த தீர்மானங்களில் ஒன்றே இது."

AAA RAM RATINGS AA

(சி-3792)
TRIAD 24170

# பளை-காங்கேசன்துறை புகையிரதப்பாதை நிர்மாணப்பணி இந்தியாவிடம் ஒப்படைப்பு

வடக்கில் பளைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்கான பணியை இந்திய கம்பனியிடம் ஒப்படைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு புகையிரததண்டவாளங்களை அமைக்கும் பணிகளில் இந்திய நிறுவனம் ஈடுபட்டுள்ளது. வவுனியாவிற்கும் ஓமந்தைக்கும் இடையிலான புகையிரதப் பாதை ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டு விட்டது. புகையிரதம் தற்போது ஓமந்தை வரைக்கும் பயணிக்கின்றது. இந்நிலையிலேயே பளைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்கு இந்தியன் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கு 149.3 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுமாவட்டத்தில்துணுக்காய் பிள்ளையார் கோவிலை புனரமைப்பதற்கு 5 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிர்மாணப்பணிகளை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கே அனுமதி கிடைத்துள்ளது. (ஸ்ரீ-2)

## பசுபிக் வலய தர சேவையாளர் சர்வதேச மாநாடு கொழும்பில்

பசுபிக் வலய தர சேவையாளர்களின் சர்வதேச மாநாடு எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

இந்த மாநாட்டினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்துவைப்பார். சர்வதேச மாநாடு தொடர்பில் இலங்கை தர சேவையாளர்கள் நிறுவனங்களின் உறுப்பினர்கள் ஜனாதிப்தியுடன் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அமைதியான சுற்றாடலில் பொர்ருளாதாரம் மூலம் பெற்றுக் கொண்ட பெறுபேற்றினால் இந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு முடிந்துள்ளது.

இந்த மாநாட்டில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, சீனா, ஜப்பான், மலேசியா உள்ளிட்ட 13 நாடுகளை சேர்ந்த 120 உறுப்பினர்கள் பங்குபற்றவிருக்கின்றனர். (ஸ்ரீ-2)

## மத்திய மாகாணத்தில் கடும் காற்றுடன் கூடிய காலநிலை

மத்திய மாகாணத்தில் அடுத்து வரும் 24 மணித்தியாலங்களுக்குள் கடும் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படலாம் என தாம் எதிர்பார்ப்பதாகவும் இக்கால நிலை தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நீடிக்கும் என வளிமண்டல திணைக்களம் நேற்று தெரிவித்தது.

தென்மேல் பருவக்காற்று மற்றும் பசுபிக் சமுத்திரத்தில் பரவலாக காணப்படும் சூறாவளியின் காரணமாக தென்மேல் பகுதியில் கடும் காற்று காணப்படலாம் எனவும் பிரதானமாக மேற்கு பகுதியிலிருந்து மத்திய மாகாண பகுதிக்கு இக்காற்று காலநிலை மாற்றம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டல திணைக்கள பேச்சாளர் தெரிவித்தார்.

மேற்கு, சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் மழையுடன் கூடிய காலநிலை காணப்படும் அதே வேளை இது வடமேற்கு மாகாணத்திற்கும் நீடிக்கப்படலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

## எலிக்காய்ச்சலால் 56 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நான்காயிரத்து 464 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது.

இதே காலப்பகுதியில் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 56 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் ஆய்வுப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த மாதத்தின் கடந்த 15 நாட்களில் மாத்திரம் 136 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியிருப்பதாக அந்த பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் இந்த வருடத்தில் எலிக்காய்ச்சல் நோயாளர்கள் 11 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரஅமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவிக்கிறது. (ஸ்ரீ-2)

## பாசிக்குடாவிற்கு 3 இலட்சம் உல்லாசப் பயணிகள் வருகை

பாசிக்குடா கடற்கரைக்கு கடந்த மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரையான நான்கு மாத காலப் பகுதிக்குள் சுமார் 3 இலட்சம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளதாக வாழைச்சேனை பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன் தெரிவித்தார்.

சனி,ஞாயிறு நாட்களிலும் பண்டிகைக்கால விடுமுறை நாட்களிலும் பெரும் எண்ணிக்கையிலான உல்லாசப் பயணிகள் வருகையைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்ட இரு பொலிஸாருக்கு விளக்கமறியல்

சட்டவிரோதமான முறையில் மரக் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் பொலநறுவை நீதிவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெலிகந்த, ஓமடியாமடு பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வெலிக்கந்த பொலிஸாரினால் கடந்த வியாழக்கிழமை இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் பொலநறுவை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் இருவரும் வாழைக் சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைவெலிக்கந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)


வலி. வடக்கு பிரதேசசபைத் தேர்தல்
23 யூலை -2011



தமிழ் இனத்தின் விடுதலை சர்வதேச அழுத்தம், சமூக அபிவிருத்திப் பணி இவற்றை முன்னெடுத் துச் செல்ல ஒன்று சேர்ந்து வாக்களிப்பீர்!

இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X 11

நடராசா மதியழகராசா (மதி)

(3711)



யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் நிறுவனம்

JAFFNA TECHNICAL INSTITUTE SRI LANKA

# ACCA

ACCA

Association of Chartered Certified Accountants

## க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு தோற்றும் அனைத்துத்துறை மாணவர்களுக்குமான ACCA கற்கை நெறிக்கான புலமைப்பரிசில் திட்டம் 2011/2012

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் நிறுவனமானது 1984ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பயிற்சிகள், ஆங்கிலக் கற்கைகள், தொழில்சார் கற்கைகளினைச் சிறப்பாக நடாத்தி வருகின்றது. மேலும் நிறுவனம் ACCA இலங்கையுடன் இணைந்து 2009ஆம் ஆண்டிலிருந்து ACCA கற்கைநெறியினை சிறப்பாக செயற்படுத்தி வருகின்றது. இலங்கையின் முதற்தர நிதி, கணக்கீடு மற்றும் முகாமைக் கற்கையாக காணப்படுவதுடன் 150 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டு காணப்படுவதனால் அதிகளவான மாணவர்கள் கற்கையில் இணைந்துள்ளதுடன் ACCA வழங்கும் நன்மைகளை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் மாணவர்களுக்குரிய சர்வதேச தர வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

ACCA ஆனது சான்றுபடுத்தப்பட்ட பட்டயக்கணக்காளர்களின் சங்கமாகும். 110 வருடகால அனுபவத்தினை உடைய சர்வதேச ரீதியில் முற்றான அங்கீகாரம் பெற்றுத் திகழும் ஓர் நிதியியல் கல்வித்தகைமையாக இது கருதப்படுகின்றது. உலகில் 150000 அங்கத்தவர்களையும் மற்றும் 450000 மாணவர்களையும் 90 பிராந்திய மற்றும் கிளைகளினூடாக இயங்கி வருகின்றது. இதனால்தான் உலகில் ஒவ்வொரு 6 நிமிடமும் ஓர் அங்கத்தவர் இத்தகைமையை இட்டு விண்ணப்பிக்கின்றார். இதன் காரணமாக யாழ்ப்பாணத்திலும் பிராந்திய அலுவலகத்தினை நிறுவி ACCA தனது கல்விச் செயற்பாடுகளை ACCA தகைமையுடைய விரிவுரையாளர்களைக் கொண்டு மேற்கொண்டு வருகின் றது.

**1. புலமைப்பரிசில் திட்டம் ACCA கற்கை நெறிக்கான க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றுகின்ற அனைத்துத்துறை மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்கும் வய தெல்லை 25 இற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.**

**2. பரீட்சை முறை:**

இரண்டு பரீட்சை வினாத்தாள்களைக் கொண்டதாக புலமைப்பரிசில் பரீட்சை அமையவுள்ளது.

I. பொது உளச்சார்பு
(1மணித்தியாலம்)

II. பொது அறிவு
(1மணித்தியாலம்)

**3. உறுதிப்படுத்தல்:**

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் ஆளடையாளத்தினை உறுதிப் படுத்தும் தேசிய அடையாள அட்டையை அல்லது தபாலக அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் காண்பித்தல் வேண்டும்.

**4. பெறுபேறுகள்:**

பரீட்சையானது ஆவணிமாத இறுதியில் இடம்பெறுவதுடன் புலமைப்பரிசில் திட்டம், பெறுபேறுகள், விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிகள் மற்றும் விபரங்கள் தபாலூடாக உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கப்படும். மாணவர்களது வசதி கருதி யாழ்ப் பாணம், அச்சுவேலி, சுன்னாகம், சாவகச்சேரி, கரவெட்டி, வேலணை பிரதேசங்களில் கற்கை நிலையங்களினை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**5. விண்ணப்பிக்கும் முறை:**

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக A4 தாளில் சுயமாகத் தயாரிக் கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து முடிவுத் திகதிக்கு முன்பாகத் தபாலில் விண்ணப்பிக்கவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ACCA கற்கைக்கான புலமைப்பரிசில் திட்டம் 2011/2012 எனக் குறிப்படுதல் வேண்டும்.

**6. விண்ணப்பிக்கும் முகவரி:**

மனிதவள முகாமையாளர்,
யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல்நிறுவனம்,
இல. 92/1, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**7. விண்ணப்ப முடிவுத் திகதி: 05.08.2011**

---

## மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகம் ☐

01. முழுப்பெயர்: ..................................................
02. முதலெழுத்துடன் பெயர்: ..................................................
03. தபாலிடல் முகவரி: ..................................................
04. பிறந்த திகதி: ..................................................
05. வயது : ஆண்டு ☐ மாதம் ☐ திகதி ☐
06. பால்: ஆண் ☐ பெண் ☐
07. மின்னஞ்சல் முகவரி: ..................................................
08. தொலைபேசி இல: ..................................................
09. தேசிய அடையாள அட்டை/தபாலக அடையாள அட்டை இல: ..................................................
10. உறவினரல்லாத இருவரது பெயர்கள்: ..................................................
..................................................
..................................................
..................................................

மேலே தரப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையென உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: .................................. ..................................................
கையொப்பம்

# இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்க மறுப்பது மனிதாபிமான உணர்வுகளுக்கு எதிரானது

## நியூசிலாந்து கிறீன்கட்சி உறுப்பினர் தெரிவிப்பு

நியூசிலாந்து தலைமை அமைச்சர் ஜோன் கீ எல்ஸியா கப்பலில் வந்த தமிழ் அகதிகளின் வேண்டுகோள்களை நிராகரித்துள்ளது குறித்து கிறீன் கட்சியைச் சேர்ந்த கீய்த் லொக்கி நாடாளுமன்றத்தில் நடந்த விசேட விவாதத்தின் போது அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

இந்த அகதிகள் நியூசிலாந்தை நோக்கி வந்த வழியில் இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

நாங்கள் இங்கு அவர்களை வரவேற்கவில்லை என்பது உங்களுக்கு ஒரு சாதாரண செய்தியாக இருக்கலாம். ஆனால் அது அந்த அகதிகளின் உயிர்ப்பிரச்சினை என்பதை ஏன் உணரவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இது நியூசிலாந்து மக்களின் மனிதாபிமான உணர்வுகளுக்கு எதிரானதாகும். பெரும் துன்பங்களை அனுபவித்து துயிரிலிருந்து தப்புவதற்காக தப்பி ஓடிவருபவர்களைப் பார்த்து இவ்வாறு கூறுவது இதயமற்றவர்களின் செயலாகும்.

ஏல்சியா கப்பலில் வந்தவர்களின் உறவினர்கள் இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட 40 ஆயிரம் தமிழ்ப் பொதுமக்களில் இருக்கக்கூடும்.

இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் சிறைக் கூடங்களிலும் அவர்களின் உறவினர்கள் இருக்கலாம். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதை போன்று கப்பலில் வந்துள்ளவர்கள் கியூ வரிசையிலிருந்து பாய்ந்து வந்தவர்கள் என்று ஜோன் கீ கூறியுள்ளார்.

ஜோன் கீ யின் தாய் 1939 ஆம் ஆண்டு யுத்தத்தில் நாசி ஜேர்மனியிலிருந்து அகதியாக தப்பி வந்து பிரித்தானியாவில் தஞ்சம் கோரியவர். யூத் அகதிகளுக்கு அப்போது கியூவரிசையில் சேரவேண்டியிருந்ததில்லை.

அவர்கள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சட்டவிரோதமாக எல்லை தாண்டி கடவுச்சீட்டு இன்றி பிரித்தானியாவில் தஞ்சம் அமைந்தவர்கள் என்றும் கீயத் லொக்கி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கப்பம்கோரி கடத்தப்பட்ட விமானப்படை அதிகாரியின் மனைவியும் மகனும் மீட்பு

(கொழும்பு)

5 இலட்சம் ரூபா கப்பம் கோரி மத்துகம பிரதேசத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட விமானப்படை அதிகாரியின் மனைவி மற்றும் மகன் ஆகியோர் நேற்று முன்தினம் மஹியங்கனை பிரதேசத்தில் வைத்து மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த 13 ஆம் திகதி மத்துகம நகரில் வைத்து கடத்திச் செல்லப்பட்டனர்.

எவ்வாறாயினும் இவர்களை கடத்திச் சென்றவர்கள் தொடர்பாக இதுவரை எந்த தகவலும் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்துகம பொலிஸார், மஹியங்கனை பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இவர்கள் விகாரை ஒன்றுக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# ரிசானாவை விடுதலை செய்யுமாறு அரசாங்கம் மீண்டும் கோரிக்கை

சவுதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இந்தோனேசிய நாட்டு பணிப் பெண்ணுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டதையடுத்து இலங்கை பணிப்பெண் ரிசானா நபீக்கிற்கான மன்னிப்பு தொடர்பிலான கோரிக்கையை இலங்கை அரசாங்கம் மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் புதுப்பித்துள்ளன.

தனது எஜமானை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் மரண தண்டனை வழங்கப்பட்ட இந்தோனேசியப் பணிப்பெண்ணுக்கு பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள் மன்னிப்பு வழங்கியதையடுத்து கடந்த புதன் கிழமை ஜஹார்த்தா திரும்பியுள்ளார்.

மேற்கு ஜாவா பிரதேசத்தை சேர்ந்த குறித்த பணிப்பெண் தன்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்ற போது எஜமானை தனது சுய பாதுகாப்பிற்காக கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

எனினும் இவருக்கு மன்னிப்பு வழங்குவதற்காக இந்தோனேசிய அரசாங்கம் நட்டஈடாக 53 இலட்சத்து4 ஆயிரத்து 884 அமெரிக்க டொலரை 'வழங்கியது. தனி நபர் உரிமை என்பதனால் அரசாங்கத்தினால் மன்னிப்பு வழங்க முடியாது. குறித்த குடும்பம் மாத்திரமே ரிசானாவுக்கு மன்னிப்பு வழங்க முடியும் அல்லது நல்லிணக்கத்தின் மூலம் நட்டஈடு வழங்க முடியும்.

இந்நிலையில் இந்தோனேசியப் பணிப் பெண்ணுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டதைப் போன்று ரிசானா நபீக்கிற்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என இலங்கை அரசாங்கம் மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ஸ்ரீ-2)

# பொலிசாருக்கு உதவியாக இராணுவ ஒத்துழைப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் பிரதேசங்களில் பொலிஸாருக்கு உதவியாக தேவைக்கேற்ப இராணுவ ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இது குறித்து சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் கடமைகளுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரங்களுடன் தொடர்புடைய 59 முறைப்பாடுகள் இதுவரை பொலிஸாருக்கு பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் 79 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் தேர்தல் பிரசாரங்கள் காட்சிப்படுத்தப்பட்ட 18 வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தேர்தல் கடமைகளுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# வாக்கு மோசடிகளை தடுப்பது தொடர்பாக மீண்டும் கலந்துரையாடல்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று தேர்தல் ஆணையாளர் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள சகல மாவட்டங்களினதும் பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்கள் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள 65 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் குறித்த இறுதி கலந்துரையாடலாக இது அமையவுள்ளது.

இதன்போது வாக்குமோசடிகளை தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மீள் பரிசீலனை செய்யப்படும் என்றும் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)


## உள்ளூராட்சி சபைத் தேர்தல்

## பருத்தித்துறை நகர சபை- 2011 யூலை 23



அன்பான வாக்காளர்களே! உங்களது வாக்குகளை எனக்களித்து என்னை வெற்றிபெறச் செய்யுங்கள். நீங்கள் வழங்கும் ஒவ்வொரு வாக்குகளும் உங்கள் கிராமத்தின் அபிவிருத்திக் கற்கள். எனது இலக்கமாகிய 2க்கு மூன்று புள்ளடிகள் இட்டும் எனக்கு ஆதரவு வழங்குங்கள்.

"சேவையே எனது இலட்சியம்"

X 2 X X

கா.யோகரட்ணம்

(ஊடகவியலாளர் – தம்பசிட்டி)

(3706)



## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல்-2011

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 18.07.2011-28.07.2011 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஐஸ்கிறீம் கடைகளுக்கு மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10000/- உம் ஏனைய கடைகளுக்கு ரூபா 2000/- உம் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 400/- உம் (வற் வரி, தேசத்தைக்கட்டியெழுப்பும் வரி நீங்கலாக) செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று விண்ணப்பப் படிவத்தினை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் 18.07.2011-28.07.2011 ஆம் திகதி காலை 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை என முகவரியிடப்பட்டு இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் 28.07.2011 ஆம் திகதி நண்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும் 28.07.2011ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முதல்வர் அலுவலகத்தில் திறக்கப்படும். சித்தி பெற்றவர் கேள்வித்தொகையினை முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

குறிப்பு:-

01. கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர, வேறு கடைகள், தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடாத்தவும், விளம்பரங்கள், விளம்பரப் பதாதைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

02. கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகள் வியர்பார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.


03. நல்லூர் உற்சவகால வியாபார அனுமதி பெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள். ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
13.07.2011

திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(சி-3785)







யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் தேவைகளைக் கேட்டறியும் கலந்துரையாடல் நேற்று ஒஸ்மானிய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கைக்கான ஈரானின் கலாசாரத் தூதுவர் மஹ.தி.ஜி.ருக்னி உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:-அ.சாள்ஸ்)*

# ஏனைய நாடுகளில் இஸ்லாமிய மக்களுக்கு இல்லாத சுதந்திரத்தை இலங்கை வழங்கியுள்ளது

## ஈரானின் இலங்கைக்கான கலாசாரப் பிரிவு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை முஸ்லிம்களுக்கு அரசியல் அந்தஸ்து கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாக ஈரானின் இலங்கைக்கான இஸ்லாமிய கலாசாரப் பிரிவு அதிகாரி மஹ.தி.ஜி ருக்னி தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களை ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கான கலாசார அதிகாரியாக பணியாற்றுவதற்கு முன்னர் பிலிப்பைன்ஸ் நாட்டில் கடமையாற்றியிருந்தேன். அங்குள்ள இஸ்லாமிய மக்களுக்கு காணப்படாத சுதந்திரத்தையும் அரசியல் பிரதிநிதித்துவத்துடன் வாழக்கூடிய சூழ்நிலைகளையும் இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் பெற்றுள்ளனர். இதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஈரான் நாடு மேற்கத்தேய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் நாடு. இதனையே இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கொண்டுள்ளார். இக்கொள்கையளவிலான ஒருமைப்பாடு காரணமாக ஈரான் இலங்கைக்கு உதவி செய்து வருகின்றது.

இங்கு யுத்தத்தினால் அழிவடைந்துள்ள கட்டடங்களைப் பார்த்தபோது ஈரான்- ஈராக் மீதான 8 ஆண்டுகளுடன் கூடிய யுத்தத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஹொராம்சார் (இரத்தநிலம்) நகரம் என ஞாபகத்திற்கு வருகின்றது.

ஈரான் நாடு இத்தகைய யுத்தத்தை எதிர்கொண்ட போதிலும் அது வேற்றுநாடுகளின் உதவி எதுவுமின்றி மீள் நிர்மாணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் உள்ளது. அதேபோன்று நீங்களும் உங்கள் பிரதேசங்களைக் கட்டியெழுப்ப வேண்டும்.

முஸ்லிம், தமிழ், சிங்கள மக்களின் இத்தனை ஆண்டு கால யுத்தத்திற்கான காரணத்தை ஆராய்கின்றபோது மேற்கத்தேய நாட்டவர்களின் பிரிவினை தூண்டுதலே அடிப்படைக் காரணம் என ஊகிக்க முடியும்.

முஸ்லிம், பௌத்தம், கிறிஸ்தவம், இந்து என்ற பல்லின மக்களுடன் சேர்ந்து வாழும் நீங்கள் நாம் இலங்கையர் என்ற எண்ணத்துடன் வாழ வேண்டும்.

உங்களுடைய தேவைகளை ஈரானிய அரசாங்கத்திற்கு தெரிவித்து உங்களுக்குத் தேவையான நடவடிக்கை எடுப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## தெய்வீக இசையரங்கில் பங்குபற்ற விரும்புவோருக்கு

நல்லூர் முருகன் மஹோற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் கலந்து கொள்ள விரும்பும் கலைஞர்களை மன்றப்பணிமனையில் உரிய படிவத்தைப் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு மன்றத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-4)

## நெற்செய்கை காணிகளை பதிவு செய்யக் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி கமநல சேவைப் பிரிவில் 12600 ஏக்கர் நெற்செய்கை நிலக்காணிகளில் 50 வீதத்திற்கு மேற்பட்ட காணி கள் இன்றும் பதிவு செய்யப்படாமல் காணப்படுகின்றது.

எனவே இக் காணிகளை செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்வதன் மூலமே விவசாயத்திற்குரிய நிவாரணங்களை பெற முடியும் எனவும் உரிய விவசாயிகள் தமது காணிகளை பதிவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் பூநகரிப் பகுதி கமநல சேவை அலுவலர் ந. சுந்தரமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோடு காலபோக விவசாயத்திற்காக கமக்கார வங்கியினால் ஒவ்வொரு விவசாயிக்கும் 50 ஆயிரம் ரூபா கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி விடயங்களை கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கமநல சேவை நிலைய பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-84)

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ, கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கௌரவ ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்ட நிகழ்வுகள் 13.07.2011-17.07.2011 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.**

## இன்றைய தினம் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

| இல. | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விபரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில். ரூ.) | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பருத்தித்துறை பிரதேச சபை | துரித மீள் எழுச்சித்திட்டம் | 1 | மருதங்கேணி சந்தை அமைத்தல் | மருதங்கேணி | 5.800 | அடிக்கல் நாட்டுவிழா |
| 2 | பருத்தித்துறை நகர சபை | துரித மீள் எழுச்சித்திட்டம் | 2 | அலுவலகக்கட்டடம் அமைத்தல் | பருத்தித்துறை | 55.000 | அடிக்கல் நாட்டுவிழா |

## ஏனைய பிரமுகர்களால் ஆரம்பித்து வைக்கப்படும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

| இல. | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விபரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில். ரூ.) | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பருத்தித்துறை பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 3 | உருத்திராவத்தை பாடசாலை வீதி புனரமைப்பு | புலோலி | 8.432 | கால்கோள்விழா |
| | | துரித மீள் எழுச்சித்திட்டம் | 4 | அம்பன் பிள்ளையார் வீதி புனரமைப்பு | மருதங்கேணி | 12.460 | கால்கோள்விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 5 | திக்கம் பாடசாலை வீதி புனரமைப்பு | அல்வாய் | 5.909 | கால்கோள்விழா |

(அ/3788)

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

# வடபகுதி தேர்தலை கண்காணிப்பதற்கு விசேட குழுவை அனுப்பிவைக்க வேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் பவ்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

வட பகுதியில் தேர்தல் சுதந்திரமான முறையில் நடைபெறுகிறதா என்பதை கண்காணிக்க விசேட குழுவொன்றை அனுப்பி வைக்குமாறு பவ்ரல் அமைப்பு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து ஆணைக்குழுவின் தலைவரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக தேர்தல் நடைபெறும் தினத்தில் யாழ்ப்பாண மக்கள் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்படக் கூடும் எனவும் அவர்கள் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் இன்றி வாக்களிக்கக் கூடிய சூழல் காணப்படுகிறதா என்பது குறித்து ஆராய்ந்து பார்க்குமாறும் கோரப்பட்டுள்ளது.

பல தசாப்தங்களுக்கு பின்னர் வடக்கில் தேர்தல் நடத்தப்படுகின்றது. பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து விடுபட்டு மக்கள் ஜனநாயக நீரோட்டத்திற்குள் வந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களுக்கு தேர்தல் முறை தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எந்தக் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றாலும் தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யவும் மக்கள் பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இதனால் தேர்தல் நடைபெறும் தினத்தில் மக்கள் எதிர்நோக்கக் கூடிய அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் குறித்து கண்டறிய விசேட குழு ஒன்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்குமாறு பவ்ரல் அமைப்பு மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

## அழகியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது அழகியல் கல்லூரி நடத்தும் அழகுக் கலைக் காட்சி இன்றும் நாளையும் காலை 10 மணி முதல் மாலை 4.30 மணிவரை இல. 128 டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியின் வளாகத்தில் நடைபெறவுள்ளது. இக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுக்கு யாழ். கல்வி வலய ஓய்வு பெற்ற மனைப் பொருளியல் சேவை க்கால ஆசிரிய ஆலோசகர் செல்வி. யோகேஸ்வரி தம்பிராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ)



சர்வதேச சுதேச மருத்துவ கண்காட்சி கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாவை வெட்டி கண்காட்சியினை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

# நாடு முழுவதிலும் 5 இலட்சம் சட்டவிரோத ஆயுதங்கள்

## ஆய்வில் தகவல்

நாடு முழுவதிலும் ஐந்து இலட்சம் சட்டவிரோத ஆயுதங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் மூலம் சட்டவிரோத ஆயுதப்பயன்பாடு குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சட்டவிரோத ஆயுதங்களை பொறுப்பேற்றுக் கொள்வதற்கு போதிய கால அவகாசம் ஒன்றை வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கால அவகாசம் ஒன்றை வழங்கி அதன் பின்னர் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போரை கைது செய்வதற்கான சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்படுகிறது.

பாதாள உலக குழுக்கள் மற்றும் ஏனைய சட்டவிரோத அமைப்புகள் அதிகளவில் சட்டவிரோத ஆயுதங்களை பயன்படுத்தி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கு சட்டவிரோத ஆயுத் பாவனை பெரும் தடையாக அமைந்துள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

போர் இடம் பெற்ற காலத்தில் சட்ட விரோத ஆயுத பயன்பாடு அதிகரித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மன்னாரில் கலைச்சங்கமம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் ஏற்பாட்டில் கலைச் சங்கமம் 2011 இயல், இசை, நாட்டிய, நாடக விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு முருங்கன் கிறிஸ்து அரசர் திறந்தவெளி அரங்கில், மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநரும், மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவருமான அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரின் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் மன்னார் ஆயர் மேதகு இரா.யோசப்பு ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரின் 300 ஆவது ஆண்டு விண்ணகப் பிறப்பின் நினைவாகவும் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆண்டை முன்னிட்டு இந்நிகழ்வு நடாத்தப்படவுள்ளது.

இக்கலை நிகழ்வில் யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி மாணவர்களின் ***ஈழத்தை அளந்த புனிதன்*** என்ற அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரின் வரலாறு கூறும் மட்டக்களப்பு பாங்கில் அமைந்த வடமோடி நாட்டுக்கூத்து இடம்பெறும்.

இந்நாட்டுக்கூத்து நிகழ்வில் மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மறை மாவட்டங்களைச் சேர்ந்த அருட் சகோதரர்கள் பங்கேற்று நடிக்கவுள்ளனர். அத்துடன் நாட்டிய முதுகலைமாணி செல்வி தியோஜினி பத்திநாதன் மாணவிகளின் நாட்டிய நிகழ்வுகளும் முருங்கன் இளைஞர் ஒன்றியத்தினரின் கிறிஸ்தவ கீதங்கள் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி ஆட்சிபீடம் ஏறியிருக்காவிடின் சூடானுக்கு நேர்ந்த நிலைமை ஏற்பட்டிருக்கும்



## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி பீடத்தில் ஏறியிருக்காவிட்டால் சூடானுக்கு நேர்ந்த நிலைமை இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். ரணில் விக்ரமசிங்க அல்லது வேறு ஒருவர் நாட்டை ஆட்சி செய்திருந்தால் நிச்சயமாக நாடு பிளவுபட்டிருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாது உறுதியான தீர்மானங்களை எடுத்த காரணத்தினால் இன்று பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அக்குரஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மக்கள் தற்போது சுதந்திரத்தை அனுபவித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த நாட்டை மீளவும் பிளவுபடுத்த சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிரவாத செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொருளாதார ரீதியாக இலங்கை வலுவடைந்து காணப்படுகிறது

## நிதியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஹெஜிங் உடன்படிக்கைக்குரிய கொடுப்பனவை வழங்குவதற்கான பொருளாதார இயலாமை அரசாங்கத்திடம் இல்லை என நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயந்தர தெரிவித்துள்ளார்.

மாத்தளை பிரதேசத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த நிதி அமைச்சின் செயலாளர் ஊடகங்களுக்கு இந்தக் கருத்தினைக் கூறியுள்ளார்.

சிலரின் தேசிய ரீதியான தகவல்கள் ஊடகங்களில் வெளியாகும் விதத்தை அவதானிக்கும் போது பொறுப்பின்றியும் பொறுப்பிற்கு அப்பாலும் தகவல்க்ளை பரிமாற்றுவதாக அவர் குறிப்பிட்டார்.

கொடுக்கல், வாங்கல் தொடர்பான அனைத்து தகவல்களையும் சரியான முறையில் வழங்காது அவை திரிபுபடுத்தப்படுமாயின் மக்களால் சரியான நிலையை புரிந்து கொள்ள முடியாமல் போகும் என்றும் அவர் தெரிவித்தார். ஹெஜிங் உடன்படிக்கை தொடர்பில் தனக்கு உறுதியாக கருத்து தெரிவிக்க முடியும் எனக் கூறிய நிதி அமைச்சின் செயலாளர் அரசாங்கத்தினால் அதனை செலுத்த முடியாது என்ற பொருளாதார நிலை காணப்படவில்லை என்றும் கூறினார்.

இவ்வாறான கொடுக்கல்- வாங்கல்களை மேற்கொள்ளும் போது வர்த்தக ரீதியாக உலகில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும் எனினும் அத்தகைய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான முறையொன்று உள்ளதாகவும் பொருளாதார ரீதியாக இலங்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்க முற்படுவதனை நிராகரிப்பதாகவும் அவர் தெரிவி த்தார்.

இத்தகைய கருத்துக்களை திரிபுபடுத்தல் மற்றும் விடயங்களை சரிவர புரிந்து கொள்ளாது விடுக்கப்படும் கருத்துக்களாகவே தான் நோக்குவதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் பலி

கண்டி-கொழும்பு பிரதான வீதியில் ,இரு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.இச் சம்பவம் நேற்றுக் காலை 6.45 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மாத்தளை பிரதேசத்திலிருந்து கொழும்பை நோக்கி வந்த பயணிகள் பேருந்தும் ஹெம்மாத்தகம பிரதேசத்திலிருந்து ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றி வந்த பேருந்தும் நேருக்கு நேர் மோதியதாலேயே குறித்த விபத்துச் சம்பவம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.18 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக கண்டி பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

20

## பல்வகைகள் ஒன்று சேர்தல் [Assemblage of Multiplicity]



சோ. கிருஷ்ணராஜா

தொடர்பும் தொடர்....

இப்பார்வை நமது மரபு வரலாற்றுப் பார்வைக்கு மாறுபட்டுள்ளது. இவ்வண்ணம் குறுக்கு மறுக்கு என்பது தன்னளவிற் சுதந்திரமாகவும் மற்றதனுடன் இணைந்தும் இணை



கலாநிதி மௌனகுரு
யாழ் பல்கலைக்கழகம்.

யாமலும் உள்ளது. ஆறு என்ற கிழவனைப் பற்றி ஒரு கதை உண்டு.
அவன் உருளைக் கிழங்கைப்
பயிரிடுவதில்லை
பருத்திச்செடி நடுவதுமில்லை
அவற்றை நடுபவர்கள் விரைவில்
மறக்கப்படுகின்றார்கள்
ஆனால்...
ஆறு என்ற கிழவன் சதா
உருண்டோடியபடியே இருக்கின்றான்.

எப்படி ஆறு அதன் இருகரைகளையும் விட்டுவிட்டுத் தான் மட்டும் நடுவில் வேகமெடுத்துப் போகிறதோ, அதே போல குறுக்கும் மறுக்கும் அது அல்லாத வேறொன்றையும் அடித்துச் சென்று கொண்டிருக்கின்றது.

ஆனந்தகுமாரசாமி பின்வருமாறு கூறுகிறார்.

சகல சீவராசிகளும் வாழ்விலே ஒன்றுபட்டன என்ற கருத்தே இந்திய அனுபூதியின் சாரமெனலாம். இவ்வுணர்ச்சி ஞானக் காட்சியாக என்றும் ஊறிக்கொண்டிருக்கும். இந்த ஒற்றுமையே உயர்வற உயர்ந்த பெரு நலமும் சிறந்த வீடு பேறுமாகும்.

அஹம் பிரம்ஹாஸ்மி என்ற சிந்தனை இந்தியா, உலகுக்கு அளித்த பெரும் சிந்தனையாகும். நானே பிரம்மம் என்பது இதன் அர்த்தம்; பிரம்மம் என்ற முழுமையின் ஒரு அங்கமே. எனவேதான் நானும் பிரம்மம் என்று ஒவ்வொரு சீவனும் எண்ணுகின்றது. எல்லோரும் பிரம்மமாயின் வேற்றுமைக்கோ, உயர்வு தாழ்வுக்கோ அங்கு ஏது இடம்?

கோடாலி கண்ணப்பரும், ஆனைக்குட்டியும் ஈழத்தமிழர் பண்பாட்டின்

### 19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்

பிரிக்கமுடியாத ஓர் அங்கமானமையினால், "நானே ஈழத்தமிழ் பண்பாடு" என்று அவர்கள் கூறுவதில் என்ன தவறு உண்டு?

அனைவருள்ளும் பிரம்மத்தைக் காண்பது போல அனைத்துப் போக்கினுள்ளும் ஈழத்தமிழ் பண்பாட்டை காணுதலே அறிவுடமை.

ஆறு போல் எல்லாம் ஓடிக் கொண்டிருக்கின்றன. அது தன் கரைகளைத்தள்ளிவிட்டு தன்னளவிற் சேர்ந்தும் பிரிந்தும் தெளிந்தும் வளைந்தும் நிமிர்ந்தும் செழித்தும் வரண்டும் சுருண்டும் ஓடிக்கொண்டே இருக்கிறது. அவ்வோட்டத்திற் பன்மைகள் ஒன்று சேர்வதும், பின் பிரிவதும் மீண்டும் புதியன சேர்வதும் பின் பிரிவதும் என இடையறா இயக் கம் நிகழ்ந்து கொண்டே இருக் கிறது.

இந்த மகா பிரவாகத்தில் நாமமும் நமது பங்கை ஆற்றுகிறோம். நம்மிலும் இந்தச் சேர்க்கையும் பிரிவும் உண்டு. இது ஓர் இடையறா ஓட்டம். இந்திய தத்துவமரபில் இது பௌத்தத்திற்கும் வேதாந்தத்திற்கும் அண்மியது.

முழுமையின் ஓர் அங்கம் குறையின் அது முழுமையாகாது. அது அங்கம் குறைந்த ஒன்றே.

(தொடரும்)

# நோய்பரப்பும் நுளம்புகளில் ஆய்வு

10

**வன்னியில் மலேரியா நுளம்பின் வீழ்ச்சி**

1995 ஆம் ஆண்டின் பின்பு இரசாயனக்கிருமி நாசினிகள், மருந்துகள் வன்னிக்கு வராததாலும், யுத்த ஆக்கிரமிப்பாலும், யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மலேரியாவால் பாதிக்கப்பட்டார்கள். இப்பாதிப்பு தொடர்ந்தும் மக்களை மேலும் பற்பல நோய்கட்கு உட்படுத்தியது. இதனால் மலேரியாவே வேறு நோய்களின் தாக்கங்களுக்கெல்லாம் மூலகாரணமாக இருந்ததை அறிய முடிந்தது. இதன் மூலம் மலேரியாவுக்கான அறிகுறிகளை விட் மேலும் பல அறிகுறிகள் தென்பட்டன. (மலத்தியன் கிருமி நாசினி 1994ஆம் ஆண்டு 2000 பெட்டிகள் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன. 1995ஆம் ஆண்டு அனுப்பப்படவில்லை. 1996ஆம் ஆண்டு 196 பெட்டிகள் மட்டும் அனுப்பப்பட்டிருந்தது) அத்துடன் இக்காலகட்டத்தில் பூச்சியியல் ஆய்வும் போதிய பரிணாமத்தை அடைந்திருக்கவில்லை. இதனால் மலேரியா காவியான அனோபிலஸ் கியூலிசிபேசிஸ் எதுவித தங்கு தடையுமின்றி பெருகி அடர்த்தி அடைந்த நிலையில் உடலில் மலேரியாவுக்கு எதிர்ப்புச் சக்தியைக் கொண்டிராத மக்களிடம் மலேரியா ஒட்டுண்ணியை பரப்புவதற்கு ஏதுவாக இருந்தது. இதனால் பல இறப்புக்களும் ஏற்பட்டிருந்தன. 1998 ஆம் ஆண்டுக் கடைசியிலும், 1999 ஆம் ஆண்டிலும் மிகவும் பெரும் சிரமத்துக்கு மத்தியிலும் பூச்சியியல் ஆய்வு முன்னெடுத்துச் செல்லப்பட்டு மலேரியா காவியான அனோபிலஸ் கியுலிபேசிஸ் நுளம்புகளிகன் பழக்க வழக்கங்கள் பற்றிய பூச்சியியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது அவற்றின் சுற்றாடல் சூழல் பரிணாம வளர்ச்சியின் பரம்பல் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டது. இது சகல ஜீவராசிகளுக்கும் பொருந்தும். ஆனால் மலேரியா காவியான அனோபிலஸ் கியூலிசிபேசிஸ் நுளம்பினது பழக்கவழக்கத்தில் குறிப்பிடக் கூடியளவு மாற்றங்கள் என்று கூறுமிடத்து இந்நுளம்புகள் சாதாரணமாக அவை முட்டையிட்டுப் பெருகும் இடங்கள் மனித குடியிருப்புகளுக்கு மிகச் சேய்மையில் இருந்ததனால் மிக அண்மித்ததான பல கிணறுகளிலும் ( குழாய்க் கிணறு தவிர்ந்த) முட்டையிட்டுக் குஞ்சுக்குடம்பிகளைப் பொரித்து தன் இனத்தைப் பெருக்கியமை கண்டுபிடிக்கப்பட்டது. மலேரியா பூச்சியியல் ஆய்வின் மூலம் இக்கண்டுபிடிப்பின் பெறுபேறாக உயிரியல் தடை முறையான (Biological Control) கச்சல் பொட்டியான் (Pociliya Reticulata) பொத்தியான்-தெத்தியன் மீன் இனம் நன்னீர்க் குளங்களில் உருவானது கண்டு பிடிக்கப்பட்டு முழு வன்னி மாவட்டத்திலும் உள்ள கிணறுகளுக்கு விட்டு அமிழ்த்தப்பட்டது. இதனால் மலேரியா காவி நுளம்பின் குடம்பிகளின் பெரும் வீழ்ச்சி தென்பட்டது.

**மலேரியா பூச்சியியல்**



இது வன்னியில் பெரும் புரட்சியை மலேரியாவில் ஏற்படுத்தியது என்பது அதன் புள்ளி விபரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. இத்தகைய பற்பல கண்டுபிடிப்புகள் நுளம்புகளினதும் அதன் குடம்பிகளினதும் அடர்த்தியை மேலும் மேலும் வீழ்ச்சியடையச் செய்வதனால் எதிர்வரும் காலங்களில் வன்னிப் பிரதேசமல்ல வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலேரியா நுளம்புகளின் தாக்கம் பலப்பல வழிகளிலும் குறைக்கப்படவும் முற்றுமுழுதாக அழிக்கப்படவும் பல ஏதுக்கள் தென்படுவதும் புலப்பாடு. இப்பூச்சியியல் ஆய்வுகள் பலப்பல கண்டுபிடிப்புக்களை வன்னியில் ஏற்படுத்தியதனால் வன்னியில் மலேரியாவின் தாக்கம் பற்பல வழிகளிலும் குறைக்கப்பட்டது. அதே அளவில் ஏனைய மாவட்டங்களிலும் குறைக்கும் என்பதும் திண்ணம். நுளம்பானது நாளாந்த உணவுப்பழக்கத்துடனான தொடர்பு வாழ்க்கையில் மலேரியா நோயாளியின் இரத்தத்தை உறிஞ்சி வரும் பொழுது அச்சமயம் மலேரியா ஒட்டுண்ணி அதன் வயிற்றுக்குள் பரம்பி மேலும்மேலும் ஒட்டுண்ணிகளை மறு உடல்களினுள் செலுத்தி மனுக்குலத்தையே ஆட்டிப் படைக்கின்றது. இக்காலகட்டத்தில் தான் வன்னியப்பிராந்தியத்தில் மலேரியா

Dr ம.இராசதுரை,
இம்பர் சிட்டி,
பருத்தித்துறை.

நுளம்பின் ஆய்வில் பூச்சியியல் ஆய்வு பாரிய கஷ்ட நெருக் கடிகளுக்கு மத்தியில் இடம்பெற்றது.

இயற்கையோடு அண்டிய உயிரியல் மற்றும் சமூகப் பங்களிப்பு மூலமும் கூட்டுறவு, குழு அமைப்பு, ஒன்றுபட்டு உழைத்தல், ஒரு தலைமைத்துவத்தில் தொழிற்படல், வன்னியில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் பற்பல வழிகளில் மேற்படி ஆய்வுகள் செயற்படுத்தப்பட்டன.

(தொடரும்)


தெல்லிப்பழை பிரதேசத்தில் புனரமைக்கப்பட்ட தந்தை செல்வா வீதியை நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திறந்து வைத்தார். அருகில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நிற்பதையும் மீள்குடியேறிய பொதுமக்களுக்கு நீர் இயந்திரத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் வழங்குவதையும் கலந்து கொண்ட பொதுமக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்

## இந்தியா வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதனை முதனிலையாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இந்திய அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் நிபுணர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சில கேள்விகள் எழுவதாகத் தெரிவித்துள்ளார்.


சிறுபான்மை மக்களினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான ஓர் அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

யுத்த நிறைவினால் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகத் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் தொடர்பு காணப்படுவதாகவும் இதனால் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியா கூடுதல் சிரத்தை காட்டி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# பயங்கரவாதம் தொடர்பில் எவ்வித நெகிழ்வும் காட்டப்படக்கூடாது



## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிராக கூட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மும்பை நகரில் அண்மையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது, பயங்கரவாதம் தொடர்பில் எவ்வித நெகிழ்வும் காட்டப்படக் கூடாது. தெற்காசிய வலயத்தில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எந்தவொரு வகையிலும் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்படாது.

சகலவிதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும் இல்லாதொழிப்பதற்கு பிராந்திய வலய நாடுகளுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளோம்.

குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்த மற்றும் சொத்துக்களை இழந்த அனைவருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# விடுதலைப்புலிகள் வெளிநாடுகளில் மீள ஒருங்கிணையும் முனைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் வெளிநாடுகளில் மீள ஒருங்கிணையும் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளதாக பிரெஞ்சு நடப்பு விவகார சஞ்சிகையொன்று அதன் கன்னிப் பிரதியில் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்நாடு, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் யுத்தம் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சில நாட்டு புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல்வேறு வழிகளில் புலிகள் தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகத் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மட்டக்களப்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஆசிரியர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு, செங்கலடி தம்மானம் வெளிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஆசிரியர் ஒருவர் பலியானதுடன் வாகன சாரதி காயமடைந்தார்.

பங்குடாவெளி அ.த.க பாடசாலையில் கடமையாற்றும் வே. கோவிந்தராஜா (வயது-45) என்ற ஆசிரியரே இந்த விபத்தில் பலியானவர் ஆவார்.

தம்மானம் வீதியோரத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்தவாறு தனது நண்பர்களுடன் மேற்படி ஆசிரியர் கதைத்துக் கொண்டிருந்த போது எதிரே வந்த கனரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிய நிலையில் ஆசிரியரை மோதிச் சென்று பின்னர் மரத்துடன் மோதியது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கனரக வாகனத்தின் சாரதி செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# பின்புற கண்ணாடிகள் மறைக்கப்பட்டிருக்கும் பேருந்துகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் பேருந்து வண்டிகளில் பின்புற கண்ணாடிகளை மறைப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான பேருந்து கண்ணாடிகளின் ஊடாக சாரதிகள் அவதானிக்க முடியாதவாறு ஓவியம், அலங்காரங்கள் மற்றும் திரைச்சீலை என்பவற்றால் மறைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

வாகன விபத்துக்கள் இடம்பெறுவதற்கான காரணிகளில் இதுவும் ஒன்றாகும் என அவர் மேலும் கூறினார்.

இதனடிப்படையில் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் கொழும்பு நகர எல்லைக்குள் பிரவேசிக்கும் பின்புற கண்ணாடி மறைக்கப்பட்டுள்ள பேருந்துகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்த ஆளும் எதிர்க்கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கு ஆளும் எதிர் கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு இவ்வாறு ஆளும் எதிர்க் கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிலியந்தலவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நல்ல யோசனைத் திட்டங்களுக்கு ஆளும் எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். துரதிர்ஷ்டவசமாக இன்று ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் பல உள்ளூராட்சி மன்றங்களில் பாரியளவில் ஊழல் மோசடி கள் இடம்பெறுவதாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆளும் கட்சியினர் தேசப்பற்று தொடர்பில் பிரசாரம் செய்து வருகின்ற போதிலும் சகல துறைகளிலும் மோசடிகள் இடம்பெறுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தரம் குறைந்த எரிபொருள் இறக்குமதியுடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் ஏனைய நாடுகளில் இவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொலிஸாரின் வாகனம் மூலம் இடம்பெற்ற விபத்துக்கு ரூ.3 இலட்சத்து 75 ஆயிரம் இழப்பீடு

(கொழும்பு)

பொலிஸாருக்கு சொந்தமான வாகனம் மூலம் இடம்பெற்ற விபத்துக்கு இழப்பீடாக மூன்று இலட்சத்து 78 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டது.

பொலிஸாருக்கு சொந்தமான வாகனமொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்ததாக தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்ததை அடுத்தே கொழும்பு மேலதிக மாவட்ட நீதிவான் விகும் ஏ.குலஆராச்சி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி கொழும்பு புல்லர்ஸ் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தினால் மோட்டார் சைக்கிளின் பின்புறமாக பயணித்த பெண்ணின் இடதுகாலில் எலும்பு முறிவுகள் ஏற்பட்டுள்ளதாக முறையிட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பத்து இலட்சம் ரூபாவை பொலிஸார் இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (ஸ்ரீ-2)

## காங்கேசன்துறை துறைமுகத்தில் கடற்கலங்களின் சிதைவுகளை அகற்றும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் தாக்கியழிக்கப்பட்ட கடற்கலங்களின் சிதைவுகளை அகற்றும் பணிகள் ஆரம்பமாகியுள்ளதாக துறைமுகம் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சிதைவுகள் அகற்றப்பட்ட பின் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி வேலைகள் அடுத்தமாதம் தொடங்கும் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. ஆறு கப்பல்களின் சிதைவுகளை அகற்றும் வேலை ஒரு இந்தியக் கம்பனியிடம் கொடுக்கப்பட்டுள்ளது என அவ்வட்டாரங்கள் கூறின.

இந்தக் கப்பல் சிதைவுகள் அகற்றப்பட்ட பின்னர் அவை ஏலத்தில் விடப்படும் என அமைச்சின் அதிகாரியொருவர் கூறினார்.

துறைமுகப் புனரமைப்பு பூர்த்தியடைந்த பின் வடக்குக்கான பொருட்களை குறைந்த செலவில் கப்பல் மூலம் அனுப்பக்கூடியதாக இருக்கும் என அந்த அதிகாரி கூறினார். (ஸ்ரீ-2)

## முல்லைத்தீவு, கிளிநொச்சியில் இடம்பெறும் மரக்கடத்தல்கள் குறித்து விசாரணை

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களின் வனப்பகுதிகளில் இடம்பெற்று வருவதாக கூறப்படும் பாரியளவிலான மரக்கடத்தல் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு பொலிஸ் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உயரதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை, பொலிஸ் விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவலின் பேரில் கிளிநொச்சி வனப் பிரதேசத்தில் வெட்டப்பட்டிருந்த பாரிய 89 மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மரக்கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தில் இயங்கும் இரண்டு வாள்களையும் சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளையும் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக பொலிஸ் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## பிரதேசங்களுக்கு ஏற்ப இனி சுற்றறிக்கைகள்

(கொழும்பு)

நாடு முழுவதும் அமுலாகும் பொது சுற்றறிக்கைகளை நிறுத்தி அந்தப் பிரதேசங்களுக்கு ஏற்ப சுற்றறிக்கைகளை வெளியிடுவது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர வெளியிட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. மாத்தளை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கமநெகும, திவிநெகும மற்றும் மஹநெகும ஆகிய வேலைத்திட்டங்கள் தொடர்பான பிரதிபலன்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

பொது சுற்றறிக்கைகள் வெளியிடப்படுவதன் மூலம் பல மாவட்டத்தைச் சேர்ந்த பாவனையாளர்கள் இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இதன் காரணமாக அந்தந்த மாவட்ட தேவைகளுக்கு அமைய சுற்றறிக்கைகள் வெளியிடப்படும் எனவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது மாவட்ட செயலாளருக்கு அதிக அளவில் அதிகாரங்கள் கிடைக்கப்பெறுமாயின் அவற்றிக்கு இடம் அளிக்கப்படும் எனவும் நிதி அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஏ)



மக்கள் வங்கியின் பொன்விழாவினையொட்டி உடுவில் மகளிர் கல்லூரியில் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையினரால் சிசுஉதான பொன்விழா அலகை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதன் திறந்து வைத்து மாணவி ஒருவரிடம் ஆரம்ப வைப்பினை ஏற்பதையும், அருகில் கிளை முகாமையாளர் சு.இராசமனோகரன், பாட சாலை அதிபர் சிராணி மில்ஸ், மாணவிகள் நிற்புதையும் படத்தில் காணலாம்.

## 2011.07 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1203-நான்காம் சிலுவைப் படைகள் கொன்ஸ்டண்டீனபோல் நகரைத் தாக்கிக் கைப்பற்றினர். பைசண்டைன் பேரரசர் மூன்றாம் அலெக்சியஸ் ஆஞ்செலஸ் தலைநகரை விட்டுத் தப்பியோடினான்.

★ 1755-கிழக்கிந்தியக் கம்பனிக்குச் சொந்தமான டொடிங்டன் என்ற கப்பல் இங்கிலாந்தில் இருந்து திரும்பும் வழியில் தாண்டதில் பல பெறுமதியான தங்க நாணயங்கள் கடலில் மூழ்கின.

★ 1762-ரஷ்யாவின் மூன்றாம் பீட்டர் கொல்லப்பட்டதை அடுத்து அவனது மனைவி இரண்டாம் கத்தரீன் அரசியானாள்.

★ 1771-இங்கிலாந்தின் சாமுவேல் ஹேர்னுடன் பயணித்த கனடாவின் சிப்பேவியன் பழங்குடிகளின் தலைவன் இனுயிட் மக்களின் ஒரு கூட்டத்தை நுனாவுட்டில் படுகொலை செய்தான்.

★ 1815-பிரான்சில் நெப்போலியன் பொனபார்ட் பிரித்தானியர்களிடம் சரணடைந்தான்.

★ 1816-பிரெஞ்சு பயணிகள் கப்பல் செனெகலுக்கு அருகில் மூழ்கியதில் 140 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1911-யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டத்தின் திருமண விதிகளுக்கு மாற்றாக யாழ்ப்பாண திருமண சிறப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

★ 1918-போல்ஷெவிக் கட்சியின் உத்தரவின் பேரில் ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலசும் அவனது குடும்பத்தினரும் கொல்லப்பட்டனர்.

★ 1918-டைட்டானிக் கப்பலில் இருந்து 705 பேரைக் காப்பாற்றிய கர்பாத்தியா என்ற கப்பல் அயர்லாந்துக்கருகில் மூழ்கியதில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1936-ஸ்பானிய உள்நாட்டுப் போர்: ஸ்பெயினில் அண்மையில் அமைக்கப்பட்ட இடதுசாரி அரசுக்கெதிராக இராணுவக் கிளர்ச்சி ஆரம்பமாகியது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: கலிபோர்னியாவில் ஆயுதங்கள் ஏற்றிச் சென்ற இரண்டு கப்பல்கள் வெடித்ததில் 320 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: முதற் தடவையாக நேப்பாம் குண்டுகள் அமெரிக்காவினால் பிரான்ஸ் மீது போடப்பட்டது.

★ 1968-ஈராக்கில் இடம்பெற்ற புரட்சியில் ஜனாதிபதி அப்துல் ரகுமான் ஆரிஃப் பதவியில் இருந்து அகற்றப்பட்டு அகமது ஹசன் அல்- பாக்கர் ஜனாதிபதியானார்.

★ 1973-ஆப்கானிஸ்தான் அரசர் முகமது சாகிர் ஷா கண் சிகிச்சைக்காக இத்தாலி சென்றிருந்த போது பதவியில் இருந்து அகற்றப்பட்டு அவரது உறவினர் முகமது தாவுத்கான் மன்னரானார்.

★ 1975-அமெரிக்காவின் அப்பல்லோ விண்கலமும் சோவியத்தின் சோயுஸ் விண்கலமும் விண்வெளியில் ஒன்றாக இணைந்தன. இரண்டு நாடுகளின் விண்கலங்கள் ஒன்றாக இணைந்தது இதுவே முதற் தடவையாகும்.

★ 1976-கிழக்குத் தீமோர் இந்தோனேசியாவுடன் இணைக்கப்பட்டது.

★ 1979-நிக்கராகுவா ஜனாதிபதி அனஸ்தாசியோ சமோசா டெபாயில் பதவியில் இருந்து விலகி மயாமிக்குத் தப்பி ஓடினார்.

★ 1981-மிசூரியில் கன்சாஸ் நகரில் நடைப் பாலம் ஒன்று இடிந்ததில் 114 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1994-பிரேசில் இத்தாலியை 3:2 என்ற பெனால்டி அடிப்படையில் வென்று உலக உதைபந்து உலகக்கிண்ணத்தை வென்றது.

★ 1996-நியூயோர்க்கில் லோங் தீவில் பாரிஸ் சென்று கொண்டிருந்த போயிங் 747 TWA விமானம் வெடித்துச் சிதறியதில் 230 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1998-பப்புவா நியூ கினியில் நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக 10 கிராமங்கள் அழிந்தன. 3 ஆயிரத்து 183 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 1998-சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை நிரந்தரமாக அமைப்பதற்கான உடன்பாடு ரோம் நகரில் எட்டப்பட்டது.

★ 2006-இந்தோனேசியா, ஜாவாவில் நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

★ 2007-பிரேசிலில் விமானம் ஒன்று தரையில் மோதியதில் 199 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1941-பாரதிராஜா, இந்தியத் திரைப்பட இயக்குநர்

★ 1954-ஏஞ்சலா மெர்கல், ஜேர்மனியின் அதிபர்.

★ 1971-சௌந்தர்யா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ.2004)

★ 1977-மாதங்கி அருள்பிரகாசம், ராப் இசைப் பாடகி.

### இறப்புக்கள்

★ 1918-ரஷ்யாவின் மன்னர் இரண்டாம் நிக்கலாஸ் (பி.1868)

★ 1918-அலெக்சாண்ட்ரா ஃபியோதரொவ்னா, அரசி (பி.1872)

★ 1918-ஒல்கா, இளவரசி (பி.1895)

★ 1918-தத்தியானா, இளவரசி (பி.1897)

★ 1918-மரீயா, இளவரசி (பி.1899)

★ 1918-அனஸ்தாசியா, இளவரசன் (பி.1901)

★ 1918-அலெக்சி, இளவரசன் (பி.1904)

★ 1972-எமிலியானுஸ்பிள்ளை, யாழ்ப்பாணத்தின் முதலாவது தமிழ் ஆயர் (பி.1901)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### அந்தரிப்போர்

மடியிலே தூக்கிவைத்து
நிலாக்காட்டிய
அப்பாவே!

இடுப்பிலிருத்தி அரவணைத்து
உலவி உலவி
உணவு ஊட்டிய
அம்மாவே!

ஒரு பாயிலே ஒன்றாய்
உறங்கி
விடியல் பொழுதுகளில்
விறுவிறுவென்று
ஒன்றாய் பள்ளிக்கு
விரைந்திட்ட அக்காவே!

ஒரு அகதி முகாமிலும்
நீங்கள்
இல்லையே

வயதிலே சின்னவள்
என்பதால்
அம்மா அப்பா வருவினம்
என்கிறார் சிறுவர் பராமரிப்பு
நிலைய அக்கா

அ.முல்லைதிவ்யன்
(பொலிகையூர்)

### கருக்கொள்ள...

நினைவுகளை தொலைத்துவிட்டு
வார்த்தைக்கு அலைகிறேன்
மௌனங்கள் தொடர்கின்றன
உதடுகளில்...
மோதிச் செல்லும் உள்
இதழசைவில் இடறிப் போனது
என் இதயம் நீ
கொடுத்த அன்பின் சுவாசத்தில்
இன்னும் நான் உயிர் வாழ்கிறேன்
விழிகள் மட்டும் துளித்துளியாய்
பேசுகின்றன நீ தொலைவானம்
சென்றதால்...
உண்மையான காதலர்களை
இப்பூமித்தாய் தன்
கருவறையில் சுமக்கின்றாள்
நானும் விரைவில் கருக்கொள்ள
வேண்டும்
இதயமே இல்லாத
இந்த மனிதர்களைவிட்டு
தூர விலகி!

எம்.சந்திரகலா, யோகபுரம்

### ஒற்றுமை

இரு கைகள் தட்டினால்
ஓசை வரும்
இரு மனங்கள்
சேர்ந்தால் தான்
வாழ்க்கை சிறக்கும்

டிசான்

### அவரவர் பார்வையில்

அம்மா
வார்த்தைகளால் வர்ணிக்க
முடியாத அன்பின் ஊற்று!
உறவு
இன்பத்தில் மகிழ்ந்து
துன்பத்தில் துணைநின்று
கடைசிவரை கூடவரும்
உன்னத ஜீவன்!
குழந்தை
பெண்மைக்கு பெருமை
சேர்த்திடும் ஓர் இனிய பொக்கிஷம்
கல்வி
வாழ்க்கையில் ஒவ்வொரு
மனிதனும் பெற்றுக் கொள்ள
வேண்டிய கிடைத்தற்கரிய
செல்வம்!

வி.றூபி, நவாலி.

### தந்தை

தந்தையே! நான் என்றும்
உனக்கு அடிமை தான்
ஏன் என்றால்
நீ என்னை
பாலூட்டி வளர்த்த
அன்னையாயிற்றே

க.விஜயா
புளியங்கூடல்

### அந்த நாளுக்காய்

முகம் காண கண்கள் ஏங்கும்
மடி சாய மனசு தவிக்கும்
முடியாமல் கண்கள் நீரில் ஆடும்
நினைவுகளில் நெஞ்சம் தத்தளிக்கும்
என்னவன் பாதம்
என் வாசல் நாடிவரும்
நாளுக்காய் வழிமேல் விழிவைத்தபடி
நகரும் என் நாட்கள்

அருள்திகா

### மாட்சியின் மகிமை

முன்னையொரு நூற்று ஐம்பது
போர்த்துகலிநங் தட்சியாம்
அடுத்தொரு நூற்று ஐம்பது
நேதர்புலம் ஆட்சியாம்
மேலுமொரு நூற்று ஐம்பது
மகா மகுடத்தின் மாட்சியாம்
மீதி ஐம்பது?
போலி சுதந்திரம் பெற்று
பொருந்தாக் கதைபேசி
பொருதிப் பொருதி
பெரும்போர் படைத்தழிந்தோம்
மீண்டும் இங்கு
அந்நியம் புகுதல் வகை செய்தோம்

ஞானி

### நினைவுகள்

கண்ணீர் விடமாட்டேன்
கண்ணுக்குள் உன் நினைவுகள்
நான் அழுதால் நீ
கண்ணுக்குள் மூழ்கிவிடுவாய்
பார்த்தமுதல் நாள் நினைவில் நீ இல்லை
பார்த்த நாள் முதல் நினைவே இல்லை!

வீ.நிசாந்தன், நவாலி

### இமயம் தொட...

எப்போது
உன் முயற்சிகள்
வீணாகி விட்டதே என
எண்கிறாயோ?
அப்போதே
உன் வெற்றிக்கான பயணம்
மீண்டும் பூச்சியத்தை
அடைந்து விடுகிறது
முயற்சி உடையர்
இகழ்சியடையார்

மாவை நா.கஜேந்திரன்

### துயர் தீருமா?

உண்ண உணவில்லை
உறங்கிட வழியுமில்லை
மன்னரும் வருவதில்லை
மந்திரிமாரேனும் பார்ப்பதில்லை
சின்ன மரநிழலும் சினத்தையே மூட்டுது
என்னவென்று கேட்டால்
எரிமலையே வெடிக்கிறது
இன்னும் எத்தனை வலிவரும்
பேதையரை அடக்கிவிட
திண்ணமாய் இருந்துகொண்டே
தீர்ப்பினை அறியவேண்டும்

மானந்தன், அல்வை.

### தரிசன கரிசனை

நான் அழிந்து நாம் வந்து சேர்ந்தால்,
தானே வரும்; அவன் தரிசனம்!
ஏன் என்ற கேள்வி கேட்காததால்,
ஏமாளியாக்கியவர்;
தான்தோன்றித்தனமாக செயற்படுவதுவும் கரிசனையே!
கரிசனையுடன் காண வருவர் தேர்தல் காலத்தில்,
அரியணை யேறியதும், அணைத்தோரை மறந்திட்டு
புரியாத தந்திரங்கள் புதிதல்ல!
மரியாதைக்காயினும் மதியார் அங்கு
மறைந்திடும் தரிசனம் நானே!!!

பொ.புனிதன்
வரியப்புலம்



## மௌனத்தின் தேடல் - 79

### வறுமையின் நிறம்

தொல்லைகளினூடான
வாழ்வை கடந்து வந்து
தொடரும் வாழ்விற்காய்
ஒரு பிடி உணவு
தொலையாத வறுமையின்
நிறம் எப்பொழுதும்
செம்மையாய்...!

நிதுநிலாபைரவி
கலிகை

### வறுமையின் கொடுமை

கொடிய யுத்தத்தால்
உறவுகளை இழந்து
வறுமையின் கொடுமையாள்
பருதவிக்கும் இரு உறவுகள்
வயிற்றுப் பசியினை–தீர்ப்பதற்காக
உலை ஏற்றி வைத்து
அரிசி அவியும் வரை–பசியால் வாடும்
தமிழ் உறவுகள்

ம.மயூரன்
இணுவில்

### எரிகிறது

பசியின் கொடுமையால்
உலைப் பானையை அடுப்பில்
வைத்து விட்டோம் சோறாக்குவதற்கு
அரிசி இல்லையே...

அ.மக்கிலின்
நெல்லியடி ம.ம.வி.

### ஏக்கம்

கண்ணீரில் காவியம் எழுதி
கல்லில் பானை ஏற்றி
காத்திருக்கும் மழலைகள்
ஏக்கம் தான் என்ன?

பு.ஜீவனா
கரவெட்டி

### எம்மினமே!

அடிப்பானை தனில் ஏதும்
அகப்படும் வாய்ப்பில்லை–இங்கேயும்
எம்மினத்தின் வாரிசுகள்
வெற்றுடலாய் விழந்திடமுன்
பற்றுடன் வாருங்கள்
பசியோடிருக்கும்–எங்கள்
பாலகரைக் காத்திடுவோம்

வீ.வினிஸ்,
சாந்தை கல்வி வ.கழகம்

### உரிமை

எமக்கென யாருமில்லையே என
கலங்காதே என் அண்ணா!
நான் இருக்கிறேன்
உன் கவலைகளைப் போக்க
உணவை விட எம்
உரிமைகள் மேல்

அ.மெசனட் டினோத்
சுண்டுக்குளி

### வினையானது

பள்ளிசெல்லும் பாலகர்நாம்
பாடங்களை கற்றிடும் வேளை
பாதையோரம் வீடமைத்து
மண்சோறு கறியாக்கி
விளையாடினோம்
இன்று அதே விளையாட்டு
வினையாகிற்று

அ.துசாந்தினி
கொம்மந்தறை

### பானையில்லை

இரக்கமே இல்லாத
இறைவனிடம் எப்படி
இரங்கிக்கேட்பது
நண்பா எம்
அழுகைக்குரல் யாருக்கும்
கேட்கவில்லையே

சி.சஜிதா
கொக்குவில்

### வெறுமை

ஒட்டிய வயிறு வற்றிய கலயம்
சுற்றிய சிறாரின் பற்றிய உணவுகள்
தட்டியே பறிப்பால் முற்றிலும்
வெறுமையானதோ?

ஆர்.ஜெயா,
அராலி

### அவல நிலையா?

தீ பற்றி எரிந்த யுத்தத்திலே
தீ குச்சு கூட இல்லையா?
அண்ணனை நம்பி
தேம்பி அழும் அண்ணன்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### நிறைவுறுமா?

தனையனையும் தம்பியையும்
உலை எரிக்கவிட்டு சென்றதாய்
உதிர்ந்து போகின்றாள்
பயமறியா மழலைகள்
பசியுடனே உலை எரிக்கின்றனர்
இன்னும் எத்தனைநாள் தொடரும்
இவர்களின் உலை எரிப்பு...

ந.வினோரூபன்
யா/நெல்லியடி ம.ம.வி

### வறுமை

அடுப்பில் உலை
வைத்தாச்சு
ஆனால் அரிசி
வாங்கச் சென்ற
எம் அம்மாதான்
இன்னமும்
வந்தபாடில்லை

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

### ஆதரவற்ற நிலையில்

தந்தையை இழந்து
தாயையும் இழந்து
உறவின் நிலை அறியாது
எம்மை எனி யார்தான்
பராமரிப்பாரோ
இந்நிலை கண்டு

கை.புலேந்தினி
வட்டுவாசல்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 80

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 22.07.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மாகாண அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி

| மாகாணம் | ஆண்டு | மேற்கு | மத்தி | தெற்கு | வடக்கு | கிழக்கு | வட.மேற்கு | வட.மத்தி | ஊவா | ச.கமுவ | நாடளாவியது |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொ.உ.உ (ரூ.பில்.) | 2009 | 2,216 | 473 | 509 | 156 | 279 | 466 | 221 | 219 | 295 | 4,835 |
| | 2010 | 2,525 | 558 | 600 | 192 | 332 | 528 | 266 | 252 | 351 | 5,602 |
| மொ.உ.உ வளர்ச்சி(%) | 2009 | 10.6 | 9.9 | 9.5 | 12.1 | 13.4 | 6.3 | 7.0 | 9.6 | 4.7 | 9.6 |
| | 2010 | 13.9 | 17.9 | 17.9 | 22.9 | 18.7 | 13.2 | 20.3 | 14.8 | 19.1 | 15.9 |
| மொ.உ.உ பங்கு(%) | 2009 | 45.8 | 9.8 | 10.5 | 3.2 | 5.8 | 9.6 | 4.6 | 4.5 | 6.1 | 100.0 |
| | 2010 | 45.1 | 10.0 | 10.7 | 3.4 | 5.9 | 9.4 | 4.8 | 4.5 | 6.3 | 100.0 |
| தலா வருமானம் (ரூ.'000) | 2009 | 381 | 178 | 206 | 131 | 182 | 201 | 181 | 168 | 153 | 236 |
| | 2010 | 430 | 208 | 241 | 161 | 212 | 225 | 215 | 190 | 181 | 271 |
| தலா வருமான வீதம்(%) | 2009 | 1.6 | 0.8 | 0.9 | 0.6 | 0.8 | 0.8 | 0.8 | 0.7 | 0.6 | 1.0 |
| | 2010 | 1.6 | 0.8 | 0.9 | 0.6 | 0.8 | 0.8 | 0.8 | 0.7 | 0.7 | 1.0 |

## ஒரே பார்வையில்...

இலங்கையின் மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சி குறித்து இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட தகவல்களில் வடக்கு மாகாணம் 22.9 சதவீத வளர்ச்சியைக் கண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் பங்கு தேசிய அளவில் 3.4% மட்டுமே.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 108.73 | 110.33 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 175.05 | 179.04 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.21 | 157.34 |
| சுவிஸ் பிராங் | 132.30 | 136.66 |
| கனேடிய டொலர் | 112.48 | 115.86 |
| அவுஸ்திரேலிய டொலர் | 115.77 | 119.53 |
| சிங்கப்பூர் டொலர் | 88.76 | 91.31 |
| ஜப்பான் யென் | 1.36 | 1.40 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.46 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.84 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# பிரதான 8 வங்கிகளுடன் கைகோர்த்துள்ள ஜனசக்தி

ஜனசக்தி இன்சுரன்ஸ் பி.எல்.சி நிறுவனமானது, காப்புறுதி கொள்கைகளைப் பெற்றுள்ள நாடெங்கிலும் வாழும் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் தங்களது மாதாந்த காப்புறுதிக் கட்டுப்பண (பிரீமியம்) கொடுப்பனவை செலுத்துவதை மிகவும் இலகுவாக்குவதற்கு அண்மையில் இலங்கையிலுள்ள பிரதான 8 வங்கிகளுடன் கைகோர்த்துள்ளது.

இதன்படி ஜனசக்தி காப்புறுதி வாடிக்கையாளர்கள், இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, எச்.எஸ்.பீ.சீ., தேசிய அபிவிருத்தி வங்கி, மக்கள் வங்கி, சம்பத் வங்கி மற்றும் யூனியன் வங்கி ஆகியவற்றின் நாடு முழுவதிலும் காணப்படும் கிளைகளில் வாடிக்கையாளர்கள் தமது கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

இந்த பிரதான வங்கிகளுக்கு மேலதிகமாக, நூறுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்ட ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் கிளை, வலையமைப்பின் ஊடாகவும் தமது மாதாந்த காப்புறுதிக் கட்டுப்பணக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான தெரிவும் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கின்றது.

இதற்கமைய நாடெங்கிலும் உள்ள ஜனசக்தியின் கட்டணம் செலுத்தும் பரந்தளவான மையங்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 800இனையும் தாண்டியுள்ளது என ஜனசக்தி இன்சுரன்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு பிரதம அதிகாரி பெடி வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

காப்புறுதி என்பது பிரதான நகரங்களில் வாழும் மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. புவியியல் எல்லைகளைக் கடந்து நாம், நாடெங்கிலும் வாழும் ஒரு மில்லியன் மக்களின் வாழ்க்கையைத் தொட்டுள்ளோம். அத்துடன் காப்புறுதியின் பலதரப்பட்ட அனுகூலங்களையும் அவர்களுடன் பகிர்ந்துகொண்டுள்ளோம்.

கடனட்டைகளைப் பயன்படுத்தி ஜனசக்தி இணையத்தளத்தின் ஊடாக கொடுப்பனவு செய்யும் வசதியையும் ஜனசக்தி தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்



மக்கள் வங்கியில் முகாமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்த 227 பேருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதியால் நியமனங்கள் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணாஜீவ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6911.98 | 6777.03 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6388.97 | 6311.13 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 8,386.11 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** சுவர்ணமஹால் பினான்ஸ்(124.10), அபான்ஸ் பினான்சியல்(77.50), லங்கா ஒரிக்ஸ் பினான்ஸ்(12.00), ஒரியன் காமன்ஸ்(32.80), பான் ஏசியன் பவர்(4.80).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ரீ சிமோல்ஹோல்டர்(99.00), சிலோன் பேவரஜ்(329.00), சிலோன் லெதர்(W)(10.00), மிரமர்(275.00), சிங்கலங்கா (1540.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# பங்கு முதலீட்டுத்துறையில் நிபுணத்துவம் பெற அரியசந்தர்ப்பம்!

## மூலதனச்சந்தை வேலைவாய்ப்பு

இலங்கை அபிவிருத்திப்பாதையில் உள்ளது. பல்வேறுபட்ட துறைகளின் ஒருமித்த தொடர்ச்சியான வளர்ச்சி, அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைகின்றது. அந்த வகையில் இலங்கையில் மூலதனச்சந்தை தொடர்ச்சியாகவும் செயற்திறனாகவும் வளர்ச்சியடைந்து வருவதனை நாம் அவதானிக்க முடியும்.

மூலதனச்சந்தை தொடர்பான தொழிற்கல்வியானது அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் வளர்ச்சி குன்றியதாகவே காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மூலதனச் சந்தைசார் தொழிற்கல்வி தொடர்பான அறிவுசார் வளங்கள் மிகவும் பற்றாக்குறையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் இடைவெளியினை ஈடுசெய்யும் முகமாக கொழும்பு பங்குப்பரிவர்த்தனை, இலங்கைப் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் பங்குத்தரகர் நிறுவனங்கள் போன்றன பல்வேறுபட்ட செயற்திட்டங்களை உருவாக்கி நடைப்முறைப்படுத்தி வருதல் குறிப்பிடத்தக்கது.

அவற்றில் ஒரு அங்கமாக இலங்கைப் பிணைகள் பரிவர்த்தனையின் பிரதேசரீதியான நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏதுவாக மூலதனச்சந்தை தொழிற்கல்வி நெறியினை யாழ்ப்பாணத்தில் நடத்த முன்வந்துள்ளது. இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு, இலங்கையில் நியாயமானதும் முறையானதுமான மூலதனச் சந்தைக் கட்டமைப்பினை ஏற்படுத்தி பேணுவதனை முதன்மை நோக்காகக கொண்ட அரச நிறுவனம் ஆகும். முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல் மற்றும் உயர் தரத்திலான முதலீட்டு ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றை மூலதனச்சந்தைக் கல்வி மற்றும் பயிற்சிப்பிரிவின் (CETU) ஊடாக இவ ஆணைக்குழு நிறைவேற்றுகின்றது.

**மூலதனச்சந்தைக் கல்வி மற்றும் பயிற்சிப்பிரிவு**
**Capital Market Education and Training Division**

இலங்கையில் முதலீட்டு சேவை வழங்குநர்களின் அடிப்படைத்தகைமைகளை உறுதிப்படுத்துவதுடன், தொடர்ச்சியாக அவர்களின் தொழில் வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து சேவை வழங்குநர்களின் முதலீட்டுச் சேவைத்தரத்தினை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துவதனை அடிப்படையாக கொண்டு செயற்படும் ஆணைக்குழுவின் ஒரு பிரிவு மூலதனச் சந்தைக் கல்வி மற்றும் பயிற்சிப்பிரிவு எனப்படும். இப்பிரிவு இலங்கையில் முதலீட்டுச் சேவை வழங்குநர்களின் தகைமையை உறுதிப்படுத்தி மூலதனச்சந்தை சான்றிதழ்களை (CCM) வழங்குகின்றது.

**மூலதனச்சந்தை சான்றிதழ்**
**Certificate in Capital Markets**

மூலதனச்சந்தை முதலீடுகள் தொடர்பான ஆலோசனை மற்றும் நிறைவேற்று அதிகார சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு சட்டரீதியான தொழிற்றகைமைச் சான்றிதழ் மூலதனச்சந்தை சான்றிதழ எனப்படும். இலங்கையில் பங்குச்சந்தை முதலீட்டுகள் தொடர்பான ஆலோசனை வழங்குகின்ற முதலீட்டு ஆலோசகர்கள் (Investment Advisors) இச் சான்றிதழினைப் பெற்றிருத்தல் இன்றியமையாதது. இது தவிர பின்வரும் துறைகளில் அதாவது வங்கிகள், காப்புறுதி நிறுவன்ங்கள், நிதிமுகாமைத்துவக் கம்பனிகள், பணச்சந்தை முகவர் நிறுவனங்கள், நிதி மற்றும் மதிப்பீட்டு ஆலோசகர் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் தமது திறனை வளர்த்துக்கொள்வதற்கும் இது மிகவும் பொருத்தமுடையது.

**இது ஏன் ஓர் தனித்துவமான தகைமை?**

♣ பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பான ஆலோசனை வழங்க மூலதனச்சந்தை சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

♣ அரச அதிகாரசபையினால் வழங்குகின்ற உத்தரவாதமளிக்கப்பட்ட தகைமைச்சான்றிதழ்களில் இது தனித்துவமானது.

**நுழைவுத் தகைமை**

ஆகக்குறைந்த நுழைவுத்தகைமையாக க.பொ.த. உயர்தர பரீட்சையில மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டி**

தொழிற்துறை மற்றும் கல்வித் துறைகளில் நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர் குழுவினால் விரிவுரைகள் வழங்கப்படும். தொடர்ச்சியாக பரீட்சார்த்திகளுக்கு மீள் மதிப்பீட்டுக கூட்டங்கள் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள், வழிகாட்டல் நூல்கள், கணக்கியல் கணிப்பான் மற்றும் இதர தேவையான சாதனங்கள் கொள்வனவு செய்யும்படி வேண்டப்படுவார். அடிப்படை பாடக்குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்.

**கட்டணவிபரம்**

• பதிவுக்கட்டணமாக ரூபா 26,500 அறவிடப்படும். ஒவ்வொரு பாடக் கையேட்டிற்கும் (Module) ரூபா 1,700 வீதம் அறவிடப்படும். இதற்கு மேலாக எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

**பாடஅலகுகள் Modules**

பரீட்சார்த்திகள் பின்வரும் பாடஅலகுகளை ஒரே தடவையில் அல்லது தமது வசதிக்கு ஏற்ப ஒன்றன் பின் ஒன்றாக விண்ணப்பித்துப் பரீட்சையினை எதிர்கொள்ள வசதி அளிக்கப்பட்டுள்ளது

♣ உரிமைப் பிணையங்கள்
Equity Securities

♣ கடன் பிணையங்கள்
Debt Securities

♣ நிதியியல் முறைமைகளும் ஒழுக்க விதிகளும்
Financial Regulations & Ethics

மேற்குறிப்பிட்ட மூன்று பாட அலகுகளிலும் சித்தியடைந்த பரீட்சாத்திகள் விரும்பினால் மூலதனச் சந்தை டிப்ளோமாவினைத் (Diploma in Capital Market) தொடர முடியும். இது கூட்டிணைக்கப்பட்ட நிதியியல், முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் மூலாதாரங்கள் (Derivatives) போன்ற பாடப்பரப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

மேலதிக தவல்களை கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்பாணக் கிளையுடன் அல்லது அதன் 0212221455 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் விண்ணப்பப் படிவங்களையும் யாழ்.பங்குப் பரிவர்த்தனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

# வடக்கில் இராணுவ ஆட்சி இருக்கும் வரை சுதந்திரமான தேர்தலை எதிர்பார்க்க முடியாது

## விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இராணுவ ஆட்சி இருக்கும் வரை அந்தப் பிரதேசங்களில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களை எதிர்பார்க்க முடியாது என புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்காக அமைச்சர்கள் பட்டாளமொன்று வடக்குக்குப் படையெடுத்துள்ளது. அங்கு நிலை கொண்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகளை சுதந்திரமாக அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் கருணாரட்ன கூறியுள்ளார்.

வடக்கில் இராணுவ ஆட்சியே நிலவுகிறது. அங்கு அரசியல் சுதந்திரமில்லை. இராணுவத்தினரும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். வடக்கில் இராணுவ ஆட்சி இருக்கும் வரை சுதந்திரமான தேர்தல்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை.

சுதந்திரமான தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான சூழல் எதிர்க்கட்சிகளுக்கு அங்கு இல்லை. அரசு மாத்திரம் சுதந்திரமாகச் செயற்படுகின்றது.

அபிவிருத்தி என்ற போர்வையில் அரசு நிகழ்வுகளையும் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக் கொள்கின்றது.

வாக்குப் பெட்டிகளை வைத்து அதனை நிரப்புவதே தேர்தல் என அரசு நினைத்துக் கொண்டிருக்கின்றது. அது மட்டுமின்றி வாக்குளைப் பலவந்தமாகப் பறித்தெடுக்கும் முயற்சியையும் முன்னெடுத்துள்ளது.

வடக்குக்கு விரைந்துள்ள அமைச்சர்கள் பட்டாளமொன்று அங்கு நிலை கொண்டு வாக்குகளைக் கொள்ளையடிக்கும் நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுத்து வருகின்றது எனவும் விக்ரமபாகு கூறியுள்ளார்.

(ஸ்ரீ-2)

## ஜனாதிபதி தென்சூடானுக்கு வாழ்த்து

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிதாக உதயமாகியுள்ள தென்சூடானுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தென்சூடானின் வரலாற்றுப் புகழ்மிக்க இந்த வெற்றியில் இலங்கையும் பங்கெடுத்துக் கொள்கிறது.

இரு தரப்பு உறவை வலுப்படுத்திக் கொள்வதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுமெனவும் தென்சூடான் ஜனாதிபதி ஜெனரல் சல்வா கீர் மயார்டீட்டிற்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

புதிதாக ஆபிரிக்காவின் 54 ஆவது நாடாக தோற்றம் பெற்ற தென்சூடானின் சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்வுகள் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர் பேராசியர் திஸ்ஸ விதாரண கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வடக்கில் இராணுவ நிர்வாகம் இல்லை; விக்ரமபாகுவின் கருத்துக்கு அரசு மறுப்பு

(கொழும்பு)

வடக்கில் இராணுவ ஆட்சி இருக்கும் வரை நீதியான தேர்தலை எதிர்நோக்க முடியாதென இடதுசாரி முன்னணித் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன ஊடகங்களுக்கு வெளியிட்ட செய்தியை அரசாங்கம் முற்றாக மறுப்பதாகவும் அது உண்மைக்குப் புறம்பானதெனவும் அரசாங்கத் தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அதுகல தெரிவித்தார்.

மூன்று தசாப்த காலத்தின் பின்னர் வடக்கில் அமைதி நிலவுகின்றது. மக்கள் இயல்பு வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போது வடக்கில் புலிகளின் நிர்வாகமும் இல்லை. இராணுவத்தினரின் நிர்வாகமும் இல்லை. சிவில் நிர்வாகமே வடக்கில் இடம்பெறுகின்றது.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் மட்டுமே இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அரசியலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது தவறான கருத்தாகும். தேர்தல் காலத்தில் மட்டும் வடக்கில் அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவில்லை. வடபகுதி எங்கும் இப்போது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் துரித அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மாவட்ட செயலகங்கள், மாகாண சபைகள், பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நாட்டின் ஏனைய பாகங்களில் நடைபெறும் சிவில் நிர்வாகமே வடக்கிலும் இடம்பெறுகின்றது.

வடக்கில் உள்ள மக்களின் அன்றாடத் தேவைகளை திட்டமிட்ட அடிப்படையில் சிவில் அதிகாரிகள் நிறைவேற்றி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் செல்லும் எவரும் இதனை நேரடியாகக் கண்டுகொள்ள முடியும் என்றும் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடியும் எனவும் தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# காரைநகர் ஊரி முருகன் கோவில் வீதியின் புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பித்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அமைச்சின் நிதியுதவியுடனும் வடமாகாண சபையின் அனுசரணையுடனும் கமநெகும திட்டத்தின் கீழ் பிரதேசங்களுக்கிடையிலான கிராமிய சிறுநகர அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட்ட ஊரி முருகன் கோவில்வீதி புனரமைப்புப்பணி நேற்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இவ்வீதியின் திருத்த வேலைகளுக்கென 61 இலட்சத்து 88 ஆயிரத்து 625 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் நீண்டகாலக் கோரிக்கையினை இத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-4-6)

# மானிப்பாய் கைதடி வீதி 629 மில்.செலவில் புனரமைப்பு

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மானிப்பாய் கைதடி வீதியை 629 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கும் பணிகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

நீண்டகாலமாக மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்ட 34 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதி வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் வடக்கின் அபிவிருத்தி குறித்த கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வரும் வேளையில் அமைச்சர், பசில் ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு இணங்க துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு இத்திட்டத்துக்கான நிதியை ஒதுக்கியுள்ளது.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்புப் பணிகளை 18 மாத காலத்துக்குள் பூர்த்தி செய்து குறிப்பிட்ட வீதியை மக்கள் பாவனைக்கு விடுவதற்கு துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர் பசில் வீதி அபிவிருத்தி அதிகாரிகளை பணித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அதிகளவான இலங்கை அகதிகள் நாடு திரும்பி வருகின்றனர்

## ஐ.நா.அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவிப்பு

அதிகளவான இலங்கை அகதிகள் நாடு திரும்பி வருவதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஆறு மாத காலப்பகுதியில் நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை மேலும் உயர்வடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக வடக்கு- கிழக்கிலிருந்து வெளியேறிய அகதிகளை மீள்குடியேற்றும் பணிகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் அடைக்கலம் புகுந்த பெருமளவிலான இலங்கை அகதிகள் நாடு திரும்பி வருவதாகவும் சென்லூசியா, மலேசியா மற்றும் ஜோர்ஜியா போன்ற நாடுகளிலிருந்து சிறியளவிலான அகதிகள் நாடு திரும்பி வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவின் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள 2800 இலங்கை அகதிகள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# பூரணகுணமடைந்த போதிலும் 546 பேர் அங்கொடையில்

பூரண குணமடைந்துள்ள நிலையிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அங்கொடை தேசிய மனநல காப்பகத்தில் 546 பேர் தங்கியுள்ளனர்.

இவர்களை மேற்பார்வை செய்வதற்கு அரசாங்கம் பாரிய தொகையை செலவிடுவதாக மனநல காப்பகத்தின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான ஜயன் மென்டிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் இந்த நபர்களின் பாதுகாவலர்கள் எவரேனும் இருப்பின் அவர்களை வீடுகளுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காப்பகத்தில் தங்கியுள்ளவர்களில் சுமார் 180 பேர் பூரண குணமடைந்தவர்கள் என்றும் அவர்களை வீடுகளுக்கு அழைத்துச் செல்வதற்கு உறவினர்கள் எவரும் முன்வரவில்லை என்றும் ஜயன் மென்டிஸ் தெரிவித்தார். (ஸ்ரீ-2)





சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மகளிர் உற்பத்தி விற்பனை நிலையம் கடந்த 14 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.தவமணி ஜெயராயன் நாடாவை வெட்டி நிலையத்தை திறந்து வைப்பதையும் பிரதம விருந்தினர் விற்பனை நிலையத்தினை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.



# வடக்கின் வசந்தம்



## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

மகிந்த சிந்தனையின் "வடக்கின் வசந்தம்" வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பின்வரும் வேலைத்திட்டங்கள் 16.07.2011 அன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ச அவர்களினாலும் பாரம்பரிய கைத்தொழில், சிறு தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.







**1. நீர்ப்பாசனம்**

- உவர் நீர்த்தடுப்பணைக்கான பின்வரும் வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

| இல. | பிரிவு | வேலையின் விபரம் | மதிப்பீடு ரூ. (மில்) | நீளம் (கி.மீ.) |
|---|---|---|---|---|
| 1. | நெடுந்தீவு பிரதேச சபை | நெடுந்தீவு உவர் நீர்த்தடுப்பணை புனரமைப்புத் திட்டம் | 23.0 | 5.0 |
| 2. | காரைநகர் பிரதேச சபை | வேணொன் உவர் நீர்த்தடுப்பணை புனரமைப்புத் திட்டம் | 29.7 | 5.5 |
| 3.. | வேலணை பிரதேச சபை | புங்குடுதீவு மடத்துவெளி உவர் நீர்த்தடுப்பணை புனரமைப்புத் திட்டம் | 13.0 | 3.0 |









**2. கடற்போக்குவரத்து சேவைகள்**

- நெடுந்தீவு இறங்குதுறை ஆழமாக்கல் நிர்மாணப் பணிகள் ரூ. 9 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- ஊர்காவற்றுறை இறங்குதுறை கட்டுமான வேலைகள் ரூ. 7 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- குறிகட்டுவான் இறங்குதுறைக்கான பாதை புனரமைப்பு ரூ. 7 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- நெடுந்தீவு – குறிகட்டுவான் இடையிலான "வடதாரகை" என்னும் புதிய படகு சேவையானது ரூபா 80 மில்லியன் செலவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



**3. நீர் வழங்கல் சேவைகள்**

- வேலணை பிரதேச சபை பிரிவில் மண்டைதீவுக்கான குடிநீர் விநியோகத்திட்டம் ரூ.10 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் 2000 மக்கள் பயனடைவர்.
- நெடுந்தீவு குழாய் நீர் விநியோகத்திட்டப் புனரமைப்புப் பணிகள் ரூ. 12 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**4. உள்ளூராட்சித் திணைக்கள சேவைகள்**

வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 26.17 மில்லியன் மதிப்பீட்டில் பின்வரும் வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

- நெடுந்தீவு யாகப்பர் கோயில் - களமுனை வீதி
- காரைநகர் ஊரி முருகன் கோயில் வீதி
- ஊர்காவற்றுறை பிரதேசசபை பிரிவிலுள்ள நெருஞ்சிமுனை வீதியும் குறுந்தூர பேருந்து போக்குவரத்து சேவையும்



**5. மின் விநியோகம்**

வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூ. 22 மில்லியன் மதிப்பீட்டில் பின்வரும் மின் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

- நெருஞ்சிமுனை மின் விநியோகத் திட்டம்
- மண்கும்பான் மின் விநியோகத் திட்டம்

**6. சமுர்த்தி உதவித் திட்டப் பயன்கள்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமுர்த்தி திட்டத்தின்கீழ் நெடுந்தீவு, வேலணை,ஊர்காவற்துறை மற்றும் காரைநகர் பிரதேசங்களை சேர்ந்த சமுர்த்தி திட்ட பயனாளிகளுக்கு பின்வரும் உதவிகள் வழங்கப்பட்டன.

- மலசல கூடங்கள் அமைப்பதற்கான மூலப்பொருள்கள்
- பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்
- ரூபா 50,000ற்கு மேற்பட்ட இலகு கடன் வசதிகள்
- "திரிய பியச" வீட்டுத்திட்டத்தின்கீழ் ரூபா 100,000 பெறுமதியான சான்றிதழ்கள்
- பாடசாலை மாணவர்களுக்கான "சிப்தெற" புலமைப் பரிசில் சான்றிதழ்கள்
- வாழ்வாதார உதவிகள்
- மனைப் பொருளாதார அபிவிருத்தி உதவிகள்



**7. மீள் எழுச்சித் திட்டப் பயன்கள்**


நெடுந்தீவு, காரைநகர், வேலணை பிரதேச செயலர் பிரிவுகளில் விவசாய, மீன்பிடி மற்றும் கல்வித்துறைகள் தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

- விவசாயிகளுக்கு ரூபா 3.73 மில்லியன் பெறுமதியான 40 நீர்ப்பம்பிகளும் 35 தெளிகருவிகளும் வழங்கப்பட்டன.
- மீனவர்களுக்கு ரூபா 0.8 மில்லியன் பெறுமதியான வலைகளும், மீனவர் சங்கங்களுக்கு ரூபா 0.3 மில்லியன் பெறுமதியான தளபாடங்களும் வழங்கப்பட்டன.
- பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 0.55 மில்லியன் பெறுமதியான 50 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.




(சீ-3790)

# சுதுமலை வடக்கு ஈஞ்சடி
# அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான தேர்த் திருவிழா சிறப்பு மலர்-17.07.2011


## ஆலய பிரதம குருவின் ஆசியுரை



சுதுமலைக் கிராமத்திலே ஈஞ்சடி என்னும் பதியிலே கோயில் கொண்டு வேண்டுவார்க்கு வேண்டிய வரங்களை வாரிவழங்கிக் கொண்டிருக்கும் ஈஞ்சடி ஞான வைரவப் பெருமானுக்கு ஒவ்வொரு வருடமும் தெட்ஷணாயனமும் ஆடி மாதப் பிறப்பன்று தேர்த்திருவிழா நடைபெற்று வருகின்றது.

இவ்விழா நெடுங்காலமாக நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தை பார்ப்பதற்கு வெகு அழகாகவும் புனிதமாகவும் ஆலய தர்மகத்தா சபையும் மக்களும் வைத்திருக்கின்றார்கள். இன்று தேர்த்திருவிழா. இத்திருவிழாவை கண்டு எம்பெருமானை தரிசித்து சகல செல்வங்களையும் பெற்று சுகவாழ்வு வாழவேண்டும் என்று வைரவப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோபவந்து"

சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்தி குருக்கள்,
ஆலய பிரதம குரு,
ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம்.

## திருத்தேர் வடம்பிடிப்போம் வாரீர்



சுதுமலை வடக்கு ஈஞ்சடி என்னும் பதியிலே கோவில் கொண்டு சிவப்பொலிவோடு அடியவர்களுக்கு எல்லாம் வேண்டும் வரம் நல்கும் காத்தல் தெய்வமாகிய ஞான வைரவர் பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

வருடம் தோறும் உத்தராயண காலத்தில் ஆரம்பமாகும் அலங்கார சாந்தி உற்சவம் தெட்ஷணாயனமும் ஆடி மாதப் பிறப்பு ஆகிய தினத்தை தேர்த் திருவிழாவாகவும் மறுநாள் தீர்த்த உற்சவமாகவும் கொண்டு நடைபெற்று வருகிறது. இன்று நடைபெறுகின்ற தேர்த்திருவிழாவிலே அடியவர்கள் அனைவரும் வருகை தந்து திருத்தேர் வடம்பிடித்து இழுத்து ஈஞ்சடி ஞானவைரவ பெருமானது பேரருளை பெற்றுய்யுமாறு வேண்டி நிற்கின்றேன்.

கா.திருநாவுக்கரசு,
தர்மகர்த்தா சபைத் தலைவர் ,
சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம்.

## தேர்த் திருவிழா நிகழ்ச்சி நிரல்


காலம் :- 17.07.2011 ஆடித்திங்கள்
1 ஆம் நாள் (ஞாயிற்றுக்கிழமை)
அபிஷேகம் :- மு.ப 8.00 மணி
வசந்த மண்டப பூசை:- மு.ப. 10.30 மணி
தேர்ப் பவனி :- நண்பகல் 12.00 மணி
பச்சை சாத்தல்:- பி.ப. 2.00 மணி

இன்றைய தினம் நடைபெறுகின்ற தேர் திருவிழாவிற்கு அடியார்கள் வருகை தந்து ஈஞ்சடி ஞானவைரவப் பெருமானின் பேரருளை பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தா சபை,
சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர்
தேவஸ்தானம்.

**மலரமைப்பு: V.கிரிதரன்,
மானிப்பாய்.**

## சுதுமலைப் பதி ஞானவைரவர் இன்று தேரேறி வருகின்றார்



திக்கெட்டிலும் திரும்பும் பக்கமெல்லாம் திருமிகு ஆலயங்கள் செறிந்துள்ள புகழ்பூத்த எமது சுதுமலை வடக்கின் திருப்பதியிலே நடுநாயகமாக வீற்றிருக்கும் எமது ஈஞ்சடி ஞான வைரவர் ஆலயத்தில் இன்று இரதோற்சவம். இவ் ஆலயம் பல நூற்றாண்டு காலத் தொன்மை வாய்ந்தது.

ஈச்சம் காடாக இருந்த இடத்திலே சூல வடிவமாக எம் பெருமான் ஒரு அடியாருக்கு காட்சி கொடுத்ததாக வரலாறு. சூலம் இருந்த இடத்திலே ஒரு சிறு குடில் அமைத்து எம்பெருமானை ஆதரித்து பூசித்து வந்தார்கள். அக்காலம் தொட்டு 1944ம் ஆண்டு வரை வேள்வி என்று சொல்லப்படும் மிருகபலி நடந்து கொண்டு வந்தது. இவ்வூர் பெருமக்களின் முயற்சியால் பலி நிறுத்தப்பட்டது. நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

1978ம் ஆண்டு நிர்வாகசபை அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்தும் விதிப்படி காலத்துக்குக் காலம் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. பல முன்னேற்றகரமான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

சிறு ஆலயமாக இருந்த இவ்வாலயம் இன்று எங்கும் இல்லாதவாறு பெரும் ஆலயமாக மிளிர்கின்றது.

வைரவப் பெருமானோடு பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், முருகன், தட்சணாமூர்த்தி, விஷ்ணு, அம்மன், நவக்கிரகமூர்த்திகள், நாகதம்பிரான், சண்டேஸ்வரர் போன்ற பரிவார மூர்த்திகளும் அணி செய்கின்றன. வைரவப் பெருமானுக்கு இரதோற்சவம் நடைபெறும் ஆலயம் என்றால் எம் ஆலயமே முன்னோடியாக பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்றது என்றால் மிகையாகாது.

இவ்வாலயத்தில் மஹோற்சவம் பதினொரு நாட்கள் நடைபெற்று தெட்ஷணாயன புண்ணிய தினமாகிய ஆடிப்பிறப்பன்று (தமிழ்) தேர்ப் பவனியும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெற்று பூங்காவனம், பொங்கல், மடை போன்ற நிகழ்வுகள் வெகுவிமரிசையாக நடைபெறுகின்றன. கொடியேற்றம் தவிர்ந்த மற்றைய எல்லாக் கிரியைகளும் நடைபெறுகின்றன. வைரவப் பெருமானுக்கு கொடியேற்றும் நிகழ்வு வாகடத்தில் இல்லாமையால் கொடியேற்றம் நடப்பதில்லை.

மஹோற்சவம் தவிர்ந்த மற்றும் பல நிகழ்வுகளும் கிரமமாக நடைபெறுகின்றன. சித்திரா பரணியை அந்தமாக கொண்டு பத்துத்தினங்கள் எங்கும் இல்லாதவாறு பெரும் கோமம் வளர்த்து இலட்ச அர்ச்சனை வருடாவருடம் நடைபெறுகின்றன. அத்துடன் மாதாமாதம் பரணித் திருவிழா, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற விழாக்களும் நடைபெறுகின்றன.

### வைரவரின் தோற்றம்

மஹா - மேரு மலையிலே ஒரு சமயம் தேவர்களுக்கிடையில் யார் பெரியவர் என்ற போட்டி உருவானது. அப்போது பிரம தேவர் தானே பெரியவர் என்றும், விஷ்ணு தானே பெரியவர் என்றும் போட்டி போட்டார்கள். சிவன் முயற்சித்தும் முடியவில்லை. ஈற்றில் சிவன் சோதியாய் தோன்றினார். விஷ்ணு பணிந்து போற்ற பிரமன் அகந்தை மேலீட்டால் உச்சித் தலையால் சிவ நிந்தனை செய்தார். பிரமனின் ஆணவத்தையடக்க சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவரே வைரவப் பெருமான். வைரவப் பெருமான் பிரமதேவரின் தலையைக் கொய்து அவரின் ஆணவத்தை அடக்கினார். அற்புதத்தின் அற்புதமான சிவ அவதாரம் வைரவ அவதாரம்.

"பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவன்
குருதியு மகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்"

தெட்சிணாயன புண்ணிய தினமான இன்று எம்பெருமான் தேரிலே பவனி வரும் காட்சியைக் கண்டு வடம்பிடித்து அவர் அருள்பெற்று சகல பாக்கியங்களையும் பெற்றுய்வோமாக.

"அல்லல் போம் வல்வினைபோம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லை போம் போகாத்துயரம் போம் - நல்ல
குணமதிகமாம் சுதுமலைப் பதிமேவும்
வைரவரை கைதொழுதற்கால்"

ச.தம்பித்துரை (ஜே.பி)


ஸ்ரீ குமரன் ஹாட்வெயார்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சிவதனகுமரன் அரிசி ஆலை
இணுவில் கிழக்கு,
இணுவில்.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
அம்பாள் அரைக்கும் ஆலை
சுதுமலை அம்மன் கோவிலடி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

சுந்தர் T.V
சுதுமலை வடக்கு, ஈஞ்சடி,
மானிப்பாய்.

V.K.K
அரிசி ஆலை
ஆலடி, உடுவில்.

விநாயகர் கட்டிங் சென்ரர் நகைப் பூங்கா
கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:-நா.பூலோகநாதன்

ஈஸ்வரன் ஸ்ரோர்ஸ்
சித்தி விநாயகர் கோவிலடி,
உடுவில் தெற்கு.

அபிராமி சவுண்ஸ்
தொடர்பு கொள்ள:-
அம்பாள் ஸ்ரோர்ஸ், சுதுமலை
பாடசாலை லேன், நாவற்குழி
கோயில் லேன், இளவாலை.
உரிமையாளர்:- R.M. சந்திரகுமார்

என்னமோ நடக்குது மர்மமாய் இருக்குது
ஒன்னுமே புரியல்ல உலகத்தில

–சந்திரபாபு

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எங்கட யாழ்ப்பாணத்தில என்ன மோனே நடக்குது!

பெரியவர் ஒருவர் நேற்று வலம்புரி அலுவலகத்திற்கு வந்தார். ஆசிரியரைச் சந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சந்திப்பு நடந்தது. மோனே எங்கட யாழ்ப்பாணத்தில் இப்ப என்ன நடக்குது என்று கேட்டார். அவரின் கேள்விக்கான அர்த்தம் புரியவில்லை ஆயினும் தமிழ்ப்பண்பாடு,விழுமியம் என்ப தில் பெரியவர் நிறைந்த அக்கறை கொண்டிருந்ததை உணர முடிந்தது.

அட மோனே! யாழ்ப்பாணத்தில் இப்ப என்ன நடக்குது என்று மீண்டும் கேட்டார். ஐயா உங்களின் கேள்வியின் எல்லை எது என்பதைப் புரிந்து கொள்ள முடியாது இருக்கிறது என்றோம்.

யாழ்ப்பாணம் பஸ்ரியன் சந்தியில ஒரு பெண்பிள்ளையை கத்தியால வெட்டிக் கொலை செய்தது, வெட்டினவன் பெற்றோலைத் தன் தலையில ஊற்றி தன்னைக் கொளுத்திப் போட்டு அந்த பெண்ணைக் கட்டிப்பிடித்து அதையும் எரிய வைத்தது.

அட நாசமறுப்பு. இப்படி சம்பவங்கள் முந்திய யாழ்ப்பாணத்தில நடந்ததோ. ஏனடா தம்பி இப்படியெல்லாம் நடக்குது. அந்த பெரியவரின் கேள்வி இதுவாக இருந்தது.

பிரபல்யமான பாடசாலைகள் அமைந்துள்ள இடம். மக்கள் நடமாடுகின்ற பகுதி. அந்தப் பகுதியில இப்படி நடக்கிறதென்றால் நாளைக்கு எங்கட மாணவச் செல்வங்களின்ர நிலையென்ன?


இப்படியான வக்கிர புத்தி எங்கட மாணவர்களின்ர மனதைப் பிழிந்து சக்கையாக்கிப் போடும்...

எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில இப்படிக் கலாசாரம் தானே! பெருமூச்சு விட்டவாறு கூறிய பெரியவர், எங்கட தமிழ்ப் பண்பாட்டு கலாசாரம் எல்லாம் நாசமறுந்த கைத்தொல்லைபேசியால விலை போயிற்று.

முன்பெல்லாம் நாற்சார வீட்டுக் கலாசாரம். பிள்ளையளின்ர நடவடிக்கைகளை கண்காணிக்க தாய் தந்தை, பெரியப்பன், சித்தப்பன், மாமன்,அயல் அட்டம் இப்படி ஒரு வாழ்க்கை.

இப்ப வீட்டில ரீவி, நாடகம்,நாடகத்தில் வருகிற பாத்திரங்களின்ர பெயர் முழுவதும் எங்களுக்கு தெரியும். ஆனால் அடுத்த வீட்டில இருக்கிறவர்களின்ர பெயர் தெரியாது. பெரியவரின் நியாயமான ஆதங்கம் ஏற்புடையதே. என்ன செய்வது? ஒருபுறத்தில் தேர்தல் சூடு. மறுபுறத்தில் சமூக கலாசார பிறழ்வின் எல்லை மீறல், என் தமிழினமே நீ எப்படித்தான் விமோசனம் அடையப் போகிறாய்?

# ஆடிப்பிறப்பும் அர்த்தமுள்ள சிறப்பும்



ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.

என்பது தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் ஆடிப்பிறப்பை சிறப்பிக்கும் பாடல்வரிகளாகும்.

பண்டுதொட்டுச் சைவத்தமிழ் மக்கள் வருடந்தோறும் ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் வரை தெட்சணாயன காலமாகவும் கொண்டாடி வருகின்றனர்.

தெட்சணாயனம் ஆரம்பமாகும் ஆடி மாதம் மக்களின் உயிர்த்தொழிலாகிய உழவுத்தொழிலையும் ஆடி விதை தேடிவிதை என விவசாயத்தை முன்னெடுக்கும் காலமாகவும் பொருத்தமாகக் கைக்கொண்டு வருகின்றார்கள். ஆடியிலே ஆரம்பிக்கும் பயிர்ச்செய்கையின் பலனைத் தை மாதத்திலே தைப்பொங்கல் பொங்கிச் சூரிய பகவானுக்கு நன்றிக் கடன் செலுத்தும் நன்நாளாகக் கொண்டாடுவார்கள்.

## இன்று ஆடிப்பிறப்பு

உலகத்தின் கண்கண்ட தெய்வமாகிய சூரிய பகவானின் வட திசை நகர்வையும் தென்திசை நகர்வையும் சிறப்பிக்கும் விதத்தில் ஆடிமாதமும் தை மாதமும் பண்டைக்காலம் முதல் எம்மக்களால் பெருமைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆடிமாதப்பிறப்பு, ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், ஆடிக் கார்த்திகை, ஆடிஅமவாசை, ஆடி வெள்ளி என ஆடிமாதம் முழுவதும் இறை வழிபாட்டிலும் தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றது.

இந்த விதத்திலே ஆண்டுதோறும் வரும் ஆடி மாதமும், இதன் சிறப்பும் எம்மக்களால் இறைவழிபாட்டிற்கும், உழவு விவசாயத்தொழில் ஆரம்பிப்பதற்கும், உழவு விவசாயத் தொழில் ஆரம்பிப்பதற்கும் உரியகாலமாகக் கருதப்பட்டு மனமகிழ்வுடன் ஆடிப்பிறப்பிற்கு விடுதலை ஆனந்தம் ஆனந்தம் என குதூகலத்துடன் கொண்டாடப்படுகின்றது.

ஆடி மாதம் பிறக்கப் போகின்ற என்பதை மக்கள் மனதிற் கொண்டு தம் வீட்டுச்சுபகாரியங்களை விலக்கி அம்பிகை வழிபாட்டிலும், முருக வழிபாட்டிலும் மற்றும் தெய்வவழிபாடுகளுடன் பிதிர்கடன்களிலும் சிரத்தை உடையவர்களாகவும்,ஆடி உழவு தேடி உழுவோம் என உழவுத் தொழில் ஆரம்பிப்பதிலும் அக்கறை உடையவர்களாகின்றனர். சிறப்புமிகு அர்த்தமுடைய ஆடிமாதத்தில் நாமும் இறை வழிபாட்டுடன் இயற்கையைப் போற்றுவோம்.

நீர்வைமணி

# கோத்தபாயவை கொல்ல முயன்றவர்கள் இந்தியாவுக்குத் தப்பிச்சென்று விட்டனர்

படைத்துறைச்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சியில் தொடர்புடைய தமிழீழ விடுதலைப்புலிகளின் சந்தேக நபர்கள் இருவர் இந்தியாவுக்கு தப்பிச்சென்றுள்ளதாக புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கெயர் சிறிலங்கா என்ற தொண்டு நிறுவனத்தில் பணியாற்றிய இவர்களில் ஒருவர் இந்நிறுவனத்தின் கிளிநொச்சி அலுவலகத்தின் பொறுப்பு அதிகாரியாக பணிபுரிந்தார் என புலனாய்வு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்நிறுவனத்தின் வாகனத்தில் வெடி பொருள்களை ஏற்றிச்சென்ற இவர்கள் கொழும்பில் மறைந்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்ததாக விசாரணைகள்மூலம்தெரிய வந்துள்ளது.

இந்த வெடிபொருட்கள் முச்சக்கர வண்டி ஒன்றில் பொருத்தப்பட்டு 2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி கோத்தபாய ராஜபக்ஷ பயணம் செய்த வாகனத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அவர் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார்.

இந்தியாவுக்கு தப்பிச்சென்றுள்ள இவ் இருவர் குறித்தும் இலங்கை அரசு இந்தியாவுக்கு தகவல்கொடுத்துள்ளது.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது தப்பிய நூற்றுக்கணக்கான விடுதலைப்புலிகளின் போராளிகள் படைத்தரப்பின் உதவியுடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

படைத்துறைச்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கொலை செய்யும் திட்டத்திற்கு பொறுப்பாக இருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுப்பிரிவு முக்கியஸ்தர் ஒருவரும் இறுதிக்கட்ட போரின்போது தப்பி இந்தி யாவுக்கு சென்றுள்ளதாகவும் அங்கிருந்து அவர் எங்கு சென்றார் என தெரிய வில்லை என்றும் இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தியாவுக்கு தப்பிச்சென்ற இவர்களில் பலர் பின்னர் கனடாவை சென்றடைந்துள்ளதாக இவ்வூடகம் செய்தி வெளி யிட்டுள்ளது.(ந)

# பூலோகத்தை இறைவன் வாழும் இனிய பூமியாக மாற்றுவோம்(மத் 13:24-43)

இயேசு தனது போதனையில் பெரும் பகுதியை உவமைகள் வழியாகவே மக்களுக்கு விளக்கியுள்ளார். முதல் மூன்று நற்செய்தி நூல்களிலும் இயேசு கூறிய உவமைகள் பல அடங்கியுள்ளன. அவர் கூறிய உவமைகள் யாவும் கடவுளாட்சி இவ்வுலகில் வருவது பற்றியும் அந்த ஆட்சியின் தன்மை பற்றியும் அமைந்திருந்தன.

எமது அன்றாட வாழ்க்கையில் மக்கள் சந்திக்கின்ற நிகழ்ச்சிகளை இயேசு உவமையாக எடுத்துச் சொல்லி, அவற்றின் வழியாக மக்களுக்கு இறையாட்சி பற்றிய உண்மைகளை உணர்த்தினார்.

இன்றைய நற்செய்தியில் இயேசு மூன்று உவமைகள் கூறுகின்றார்: வயலில் தோன்றிய களைகள், கடுகு விதை, புளிப்பமாவு உவமைகள் ஆகும்.

## பரமபிதா காட்டிய பாதை


மனிதனுடைய குறைகளையும் பல வீனங்களையும் பெரிதுபடுத்துபவர் அல்ல நம் இறைவன். நீடிய பொறுமை உள்ளவர், கண்டிக்க காலம் தாழ்த்துபவர் நம் இறைவன்.

மனிதன் பாவம் செய்தபோதிலும், இறைவன் இரக்கத்தோடும் மனம் திரும்பகொடுத்த காலத்ததை பயன்படுத்தாமல், மனம் திரும்பாமல் இருந்தால் இறுதி நாளில் தீர்ப்பும் கொடிய தண்டனையும் உண்டு என்கிறார்.

கடுகு விதை உவமை, இறையாட்சி என்றால் என்ன என்பதை மக்களுக்கு விளக்கிக் கூற இயேசு பயன்படுத்திய ஓர் உருவகம் கடுகு விதை ஆகும். சிறியதொரு கடுகு விதை வளரும் போது மற்றெல்லாச் செடிகளைவிட பெரியதாக வளரும்.

இறையாட்சியும் அவ்வாறே சிறிய அளவில் தொடங்கி மாபெரும் அரசாக உருப்பெறும் என்று இந்த உவமை விளக்கம் தருகிறது. ஆனால் இயேசுவின் உவமைகளில் எதிர்பாராத திருப்பங்கள் வரும்என்பதைக் கருத்தில்கொண்டு இந்த உவமையைப் புரிந்துகொள்ள வேண்டும் என விவிலிய அறிஞர்கள் கூறுவர்.

இறையாட்சியைப் புகழ்மிக்க கேதுரு மரத்திற்கு ஒப்பிடாமல் மிகச் சாதாரணமான தோட்டப் பயிரான கடுகுச் செடிக்கு இயேசு ஒப்பிடுகிறார். ஆனால் இயேசுவில் நம்பிக்கை கொள்வோரின் வாழ்வில் அதிசயமான மாற்றம் நிகழும். அவர்கள் ஒரு புதிய நிலைக்கு உயர்த்தப்படுவார்கள். இந்த மாபெரும் மாற்றம் நம்மில் நிகழ வேண்டும் என்றால் நாம் இயேசு விடத்தில் முழுமையான நம்பிக்கை கொண்ட மக்களாக வாழ்ந்திட வேண்டும்.அப்போது நிகழ இயலாததும் நிகழும். சிறிய கடுகு விதையை மாபெரும் செடியாக வளர்ந்திட செய்யவும் கடவுளுக்கு வல்லமை உண்டு. அதன் கிளைகள் புளிப்புமாவு உவமை. இந்த உலகில் என்னால் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது என்று சலித்து. விரக்தியில் வாடும் நமக்காகத்தான் இயேசு இந்த உவமையைச் சொல்லியிருக்கிறார். புளிப்பு மாவின் அளவு சிறியது.. இருப்பினும் மாவு முழுவதையும் அது புளிப்பேற்றுகிறது



அது போலத்தான் ஒவ்வொரு சிறிய செயலும், ஒவ்வொரு சிறிய சொல்லும் அவை மௌனமாக இந்த உலகின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நாமும் அப்படித்தான். ஒவ்வொரு சிறிய செயல், ஒரு புன்னகை, ஒரு பாராட்டு வார்த்தை, ஒரு ஊக்க மொழி, ஒரு அன்பான தொடுதல்... இவற்றின் வழியாக ஒரு சில மனிதர்களின் வாழ்வைத் தொட முயற்சிப்போம்.

இறுதியில், ஏராளமான மனிதர்கள் தொடப் படுவார்கள். நாமும் நற்செய தியாள ராக வாழ வோம். இந்த உலகம் விண் ணரசின் மதிப்பீடுகளை அறியட்டும். இப் பூலோகம் இறைவன் வாழும் இனிய பூமியாக மாறும்.

**ம. பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர,**
**பத்திரிகையாளர்.**

ஈழத்தமிழர் பிரச்சினையில்

# கருணாநிதி செய்யத் தவறியதை ஜெயலலிதா துணிச்சலாக செய்துள்ளார்

## தமிழருவி மணியன் பாராட்டு

ஈழத்தமிழர் பிரச்சினையில் தி.மு.க.தலைவர் கருணாநிதி செய்யத் தவறியதை தமிழக முதல்வர் ஜெய்லலிதா துணிச்சலாக செய்து முடித்துள்ளார் என்று காந்திய மக்கள் இயக்கத் தலைவர் தமிழருவி மணியன் பாராட்டு தெரிவித்தார்.


திருச்செங்கோட்டில் நடைபெற்ற காமராஜர் பிறந்த தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஒரு அற்புதமான தீர்மானத்தை சட்டப் பேரவையில் நிறைவேற்றியவர் ஜெயலலிதா. 234 சட்டப் பேரவை உறுப்பினர்களும் ஏகமனதான இந்த தீர்மானம் 7 கோடி தமிழர்களின் தீர்மானமாகும்.

இலங்கை மீது அனைத்து நாடுகளும் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்ற தீர்மானங்களை மத்திய அரசு எள்முனை அளவு கூட மதிக்கவில்லை. மாறாக ராஜபக்ஷக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கிறது.

ராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தத்தில் உள்ள சரத்துக்களை இலங்கை மதிக்காத போது கச்சதீவு ஒப்பந்தத்தை நாம் ஏன் மதிக்க வேண்டும். கச்சதீவை திரும்பப் பெற வேண்டும். கருணாநிதி ஆட்சியில் காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது. இதை இப்போதுள்ள ஆட்சியாளர்கள் மறந்து விட்டனர். இதை ஜெயலலிதா கவனத்துக்கு யாரும் கொண்டு போகவில்லை என்று நினைக்கின்றேன். இதற்குக் காரணமானவர்கள் மீது அவர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# சத்ய சாய்பாபாவின் மகாசமாதி திறப்பு; புட்டபர்த்தியில் பக்தர்கள் குவிந்தனர்



(புட்டபர்த்தி)

சத்யசாய்பாபா மகாசமாதி பக்தர்களின் தரிசனத்திற்காக நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. பிரசாந்தி நிலையத்திலுள்ள சாய்பாபாவின் சமாதி நேற்று முன்தினம் குரு பூர்ணிமாவையொட்டி மலர்களைக் கொண்டு விசேடமாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

சத்யசாய்பாபா ஏப்ரல் 24 ஆம் திகதி ஜீவமுக்தி அடைந்தார். இதைத் தொடர்ந்து சமாதி கட்டும் பணி நடந்து வந்தது. இந்த சமாதி மிகப் பிரமாண்டமாக கட்டப்படும் என சத்யசாயிபாபா மத்திய அறக்கட்டளை அறிவித்திருந்தது. இந்நிலையில் குரு பூர்ணிமாவை யொட்டி நேற்று முன்தினம் மகாசமாதி திறக்கப்படும் என அறக்கட்டளை நிர்வாகிகள் அறிவித்திருந்தனர்.

சத்யசாயிபாபா ஒவ்வொரு ஆண்டும் குரு பூர்ணிமா அன்று பிரசாந்தி நிலையத்தில் உள்ள சாய் குல்வந்த் ஹாலில் பக்தர்களுக்கு தரிசனம் கொடுப்பார்.


இதற்காக இலட்சக்கணக்கான பக்தர்கள் புட்டபர்த்தியில் கூடுவது வழக்கம். அந்த வகையில் இந்தாண்டு அவர் ஜீவமுக்தியடைந்த பின்னர் அவரது சமாதியில் வந்து தரிசனம் செய்வதற்காக ஏராளமான பக்தர்கள் புட்டபர்த்தியில் குவிந்து வந்தனர்.

இதையடுத்து சத்ய சாய்பாபாவின் மகா சமாதி பக்தர்களின் தரிசனத்திற்காக குரு பூர்ணிமா அன்று திறக்கப்படும் என அறக்கட்டளை நிர்வாகிகள் தெரிவித்திருந்தனர்.

இதன்படி நேற்று முன்தினம் மகா சமாதி திறக்கப்பட்டது. வெள்ளை பளிங்கு கற்களால் அமைக்கப்பட்ட சமாதி மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ஆயிரக்காணக்கான பக்தர்கள் சாய் குல்வந்த் மண்டபத்தில் திரண்டு இருந்தனர். (ஸ்ரீ-4)

# 2ஜி அலைக்கற்றை ஊழல் குறித்து சிதம்பரத்தையும் விசாரிக்க வேண்டும்

## சி.பி.ஐ.யிடம் பா.ஜ.குழு நேரில் மனு



2ஜி அலைக்கற்றை ஊழல் தொடர்பாக அப்போது நிதியமைச்சராக இருந்த சிதம்பரத்தையும் விசாரிக்க வேண்டும் என்று பாரதிய ஜனதா குழுவினர் சி.பி.ஐ. இயக்குநரை நேரில் சந்தித்து மனு அளித்தனர். சி.பி.ஐ. இயக்குநர் பொதுவாக அரசியல் கட்சி பிரதிநிதிகளை நேரிடையாக சந்திப்பது இல்லை.

இருப்பினும் பாரதிய ஜனதா எம்.பி. பிரகாஷ் ஜாவேத்கர் தலைமையிலான ஐவர் குழுவை சந்திக்க சி.பி.ஐ. இயக்குநர் ஏ.பி.சிங் அனுமதியளித்தார். இக்குழுவில் எம்.பி.க்கள் மாயா சிங், சிவகுமார் மற்றும் பா.ஜ. நிர்வாகிகள் புபேந்திர யாதவ், ஜகத் பிரசாத் நடா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இக்குழுவில் சி.பி.ஜ. இயக்குநரிடம் அலைக்கற்றை ஒதுக்கீடு விற்பனை கொள்கைக்கு சிதம்பரம் அனுமதியளித்தார் என்பதை குறிப்பிடும் ஆதாரங்கள். மேலும் இது தொடர்பான தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் பெறப்பட்ட ஆதாரங்கள் அடங்கிய மனுவை அளித்தனர். மேலும் மனுவில் தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த ராஜா கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளார். அவர் மீது முறைப்படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆனால் அப்போது நிதி அமைச்சராக இருந்த சிதம்பரத்தை சி.பி.ஐ. விசாரிக்காதது ஆச்சரியமாகவுள்ளது. இதற்கான காரணங்கள் குறித்து கண்டறியப்பட வேண்டும். மேலும் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் அரசிற்கு ஏற்பட்டுள்ள உண்மையான நட்டம் எவ்வளவு என்பது குறித்து சி.பி.ஐ. அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர். (ஸ்ரீ-4)

# கடன் நெருக்கடியில் சிக்கி தவிக்கும் அமெரிக்கா

## ஒபாமாவின் ஆட்சி கவிழும் நிலை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடன் நெருக்கடி தலைதூக்கியுள்ளது. தற்போதைய கடன் பிரச்சினையால் ஒபாமா ஆட்சி கவிழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த இக்கட்டான நிலையிலிருந்து நாட்டை மீட்க ஒத்துழைப்பு அளிக்கும் படி எதிர்க்கட்சியான குடியரசு கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

உலகின் வல்லரசு நாடான அமெரிக்கா தனது கடன் உச்சவரம்பு நிலையை எட்டி விட்டது. அமெரிக்காவின் கடன் உச்ச வரம்பு 14.3 திரில்லியன் டொலர். ஒரு திரிலியன் என்பது ஒரு இலட்சம் கோடி. இந்த கடன் உச்ச வரம்பை வரும் ஓகஸ்ட் 2 ஆம் திகதிக்குள் உயர்த்த வேண்டும். கடன் நெருக்கடியை சமாளிக்க வரி விதிப்பு போன்ற அதிரடி நடவடிக்கைகளை ஜனாதிபதி ஒபாமா மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கு எதிர்க் கட்சியான குடியரசுக் கட்சியின் ஆதரவு தேவை. ஆனால் ஒத்துழைப்பு தர மறுக்கின்றனர். இதையடுத்து வெள்ளை மாளிகையில் நான்கு சுற்று பேச்சுவார்த்தை நடத்திய ஜனாதிபதி ஒபாமா நேற்று முன்தினம் குடியரசு கட்சியினருடன் நேரடி வாக்குவாதத்தில் ஈடுபட்டபோது தற்போதைய கடன் பிரச்சினையால் என் ஆட்சிக்கே ஆபத்து ஏற்படும் என தெரிவித்தார்.

கடன் நெருக்கடியை சமாளிக்க செலவீனங்களை இரத்துச் செய்ய வேண்டும், வசதியுள்ளவர்களுக்கு வரி விதிக்க வேண்டும் என்பது ஜனாதிபதி ஒபாமாவின் திட்டம். இதற்கு குடியரசு கட்சியினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

குடியரசு கட்சியினர் ஒபாமாவின் முடிவுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்றால் அமெரிக்கா திவால் நிலைக்கு தள்ளப்படும். கடந்த 2008 ஆம் ஆண்டு உலக பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டதை விட மோசமாகும் என பொருளாதார வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# லிபிய கிளர்ச்சியாளர்களை அதிகாரபூர்வ ஆட்சியாளர்களாக அமெரிக்கா ஏற்பு

(வோஷிங்டன்)

லிபிய கிளர்ச்சியாளர்களை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்வதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

லிபியாவின் அதிகாரபூர்வமான ஆட்சியாளர்களாக எதிர்க்கட்சியினரை ஏற்றுக் கொள்வதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டு, முடக்கப்பட்டுள்ள பில்லியன் கணக்கான அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்துக்கள் கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இஸ்தான்புல்லில் இராஜதந்திரிகளுக்கு இடையில் நடைபெற்ற கூட்டத்தின் போது அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனநாயக ரீதியான மறுசீரமைப்பை ஏற்படுத்துவதாக கிளர்ச்சியாளர்கள் உறுதியளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு மற்றும் அரேபிய வலயத்தைச் சேர்ந்த 30 நாடுகள் கிளர்ச்சியாளர்களை லிபியாவின் உத்தியோகபூர்வ அரசாங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எவ்வாறெனினும், இந்தத் தீர்மானத்தை லிபிய ஜனாதிபதி முவம்பர் கடாபி நிராகரித்துள்ளார்.

இதேவேளை லிபிய ஜனாதிபதி கடாபி பதவி விலகவேண்டுமென உலகின் பல நாடுகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. (ஸ்ரீ - 2)

# பொதுமக்களை கொலை செய்து மனித உரிமைகள் மீறல்

## பெருவின் முன்னாள் இராணுவ அதிகாரி நாடுகடத்தல்

பெருவில் 1980 ஆம் ஆண்டு மாஓவாத கொரில்லாக்களுக்கு எதிரான போரில் 69 கிராமவாசிகளை கொலை செய்த குற்றத்திற்காக அந்நாட்டின் முன்னாள் இராணுவ அதிகாரி ரெல்மொ ஹுர்கடோவை அமெரிக்கா நாடு கடத்தியுள்ளது.

பெண்கள், குழந்தைகள் உட்பட பொதுமக்களை கொலை செய்ய இராணுவ வீரர்களுக்கு ஹுர்கடோ உத்தரவிட்டதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு மன்னிப்பு வழங்கப்பட்டவர்களில் ஹுர்கடோவும் அடங்கியிருந்த போதிலும் பெருவின் உயர்நீதிமன்றம் அதனை செல்லுபடியற்றது என பின்னர் அறிவித்திருந்தது.

இதனையடுத்து அமெரிக்காவிற்கு தப்பிச் சென்ற ஹுர்கடோ கடந்த 2007 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

பெருவிலுள்ள நீதிமன்றத்தில் ஹுர்கடோ ஆஜராகும் போது அவர் தடுத்து வைக்கப்படும் இடம் தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரில்லாக்களுடனான யுத்தத்தின் போது மனித உரிமைகளை மீறியதாக பெருவின் இராணுவத்தினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போதிலும் சிலர் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சிரியா மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும்

## பிரான்ஸ் ஜனாதிபதி வலியுறுத்தல்

கிளர்ச்சியாளர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் சிரியா மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி வலியுறுத்தியுள்ளார்.

சிரியா நாட்டின் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அரசை எதிர்ப்பவர்கள் மீது சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதைக் கண்டித்து பாரீசில் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி, சிரிய ஜனாதிபதியின் நடவடிக்கை ஏற்றுக் கொள்ள முடியாதது. மக்கள் மீது அரசு முரட்டுத்தனமாக நடவடிக்கைகளை கையாண்டு வருகிறது. எனவே சிரியா மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்றார்.


அத்துடன் சிரிய நாட்டின் ஜனாதிபதியாக நீடிக்கும் தகுதியை பஷர் அல் அசாத் சட்டப்படி இழந்துவிட்டார் என்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றவும் பிரான்ஸ் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஸ்ரீ-2)



பெண்கள் உலக கோப்பை கால்பந்து தொடரின் பைனல் போட்டி நாளை நடக்கிறது. ஜப்பான் அணிக்கு எதிராக சாதிக்க, ஜெர்மனியில் பயிற்சியில் ஈடுபட்ட அமெரிக்க அணியின் கோல் கீப்பர் ஹோப் சோலோ.



ஜெர்மனியில் நடக்கும் பெண்களுக்கான உலக கோப்பை கால்பந்து தொடரின் பைனலில்(ஜூலை 17) அமெரிக்கா, ஜப்பான் அணிகள் மோதுகின்றன. இதற்கான பயிற்சியில் ஈடுபட்ட அமெரிக்க வீராங்கனைகள்.



ஜெர்மனியில் நடக்கும் பெண்களுக்கான உலக கோப்பை கால்பந்து தொடரின் பைனலில்(ஜூலை 17) அமெரிக்கா, ஜப்பான் அணிகள் மோதுகின்றன. பைனல் நடக்கவுள்ள பிராங்பர்ட் மைதானத்தின் அழகிய தோற்றம்.

# இலங்கை அணிக்கு புதிய பயிற்சியாளர்



(கொழும்பு)

இலங்கை அணியின் புதிய பயிற்சியாளராக ருமேஸ் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் பயிற்சியாளராக டிரவர் பெய்லிஸ் இருந்தார். கடந்த உல்கக்கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய அணியிடம் இலங்கை தோல்வியடைந்ததை அடுத்து பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகினார். அடுத்து அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டுவர்ட் லா பயிற்சியாளராக இருந்தார். தற்போது, இவரும் விலகி உள்ளதால் இலங்கை அணியின் தற்காலிக பயிற்சியாளராக ருமேஷ் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் அமைப்பின் தலைமை அதிகாரி தர்மதாச கூறியதாவது;


புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள ருமேஷ், இலங்கை அணிக்காக 23 டெஸ்ட் மற்றும்70 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். அடுத்த மாதம் தொடங்கும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று டெஸ்ட், ஒரு இருபது-20 , மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகளுக்கு மட்டும் பயிற்சியாளராக செயல்படுவர்.

**டி.ஆர்.எஸ். இல்லை**

போட்டிகளின்போது போட்டி நடுவர் மறுபரிசீலனை (டி.ஆர்.எஸ்.) முறையை பயன்படுத்தினால் அதிகமாக செலவாகும். தற்போது எங்களுக்கு அந்தளவு ஸ்பொன்சர் கிடைக்கவில்லை .இதனால் டி.ஆர்.எஸ். முறையை இத்தொடரில் பயன்படுத்தப்போவதில்லை. இவ்வாறு தர்மதாச கூறினார்.

# மும்பை குண்டு வெடிப்புக்கு மகேந்திரசிங் தோனி கண்டனம்

(லண்டன்)



மும்பை குண்டு வெடிப்பு தொடர்பாக இந்திய அணித்தலைவர் தோனி கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, மும்பை குண்டு வெடிப்பு தகவல் கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தேன். இது என்னை வேதனையில் ஆழ்த்தியது. 3 ஆண்டுகளுக்கு முன்பும் மும்பையில் தீவிரவாதிகள் தாக்கியபோது நான் வேதனைப் பட்டேன். அதே சூழல் இப்போது உருவாகியுள்ளது. உலகில் எந்த இடத்தில் இது போன்ற தாக்குதல் நடந்தாலும் அது தவறான கண்டிக்கத்தக்க விடயம். இது போன்ற தாக்குதல் இனிமேல் நடக்காமல் இருக் க வேண்டும் என்று விரும்புகிறேன்.

கடந்த தீவிரவாதிகள் தாக்குதலில் இருந்து மும்மை இயல்பு நிலைக்கு மிக வேகமாகத் திரும்பி விட்டது. அதேபோல் இப்போதும் இயல்புநிலைக்கு மும்பை விரை வில் திரும்பும் என்று எதிர்பார்க்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



இந்தியா, சாமர்சட் அணிகள் மோதிய முதல் பயிற்சி போட்டி டான்டனில் நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற சச்சின், டிராவிட் உள்ளிட்ட இந்திய வீரர்கள்.

# சனல் 4 காணொளி பொய்...

அப்படி மறுப்பதானால் தன்னை ஒரு நியாயவாதியென நிரூபிக்க அனைத்துலக விசாரணையை, இலங்கை அரசு ஏன் மறுக்க வேண்டும்?

இலங்கை அரசின் மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள்ள புறம் தள்ளி விட்டு அங்கு நல்லிணக்கத்தினை ஏற்படுத்திவிட முடியாது.

இலங்கை அரசாங்கம் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கான நியாயப்பாடுகளை புறந்தள்ளிக் கொண்டிருப்பது நிச்சயமாக இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும்.

இலங்கைக்கு சர்வதேசத்தின் அழுத்தங்கள் அதிகரித்துள்ளது.

சனல் 4 காணொளி பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசு எல்லா குற்றச்சாட்டுக்களையும் அனைத்துலக கரிசனைகளையும், புறந்தள்ளிவிட்டு நல்லிணக்கம் பற்றிப் பேசமுடியாது.

போர்க் குற்றச்சாட்டுக்கள் பொய்யானதெனில் சர்வதேச விசாரணைகளை அனுமதிப்பதன் ஊடாக அதனை நிரூபிக்க முடியுமல்லவா?

அதேநேரம் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளை விரும்பாமலே சர்வதேச நாடுகள் தம்மீது போர்க்குற்றச்சாட்டை முன்வைப்பதாக இலங்கை அரசு கூறுகின்றது.

ஆனால் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த சர்வதேச நாடுகள் பெருமளவான நிதியைச் செலவிட்டன என்பதை மறந்துவிடமுடியாது எனவும் கேணல் ஹரிகரன் தனது கருத்தில் தெரிவித்துள்ளார். (ந)

# முன்னாள் இராணுவத்...

சட்டம் சுயாதீனமாக செயற்பட வேண்டும். இதனையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டு மக்கள் இன்று சட்டத்தின் மீதே நம்பிக்கை வைத்துள்ளனர். இதில் ஆட்சியாளர்களின் தலையீடுகள் மேற்கொள்ளப்படுமானால் பொதுமக்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள். இதற்கெதிராக தமது எதிர்ப்பை வெளியிடுவார்கள்.

பொன்சேகாவுக்கு சரும நோய் தொடர்பாக எக்கோதெரபி சிகிச்சை ஒரு வாரம் வழங்கப்படவேண்டும். இதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

ஆனால் கடந்த 14ம் திகதி அவரை தனியார் மருத்துவமனைக்கு கொண்டு வரவில்லை. இந்த செயற்பாடு உயர் மட்ட அறிவித்தல் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பின்னர் நாம் நீதிமன்றத்துக்கு அறிவிப்போம் எனத் தெரிவித்தோம். அதன் பின்னர் தாமதமாகி பொன்சேகா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார். (ந)

# இலங்கையில் நடந்த...

வருமான ஜேம்ஸ் மக் கவர்ன் உலகின் மிக மோசமான மனிதர்களை இந்த ஆவணப்படம் வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த ஆவணப் படத்தில் இடம்பெற்றுள்ள காட்சிகள் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டவர்களை பொறுப்புக் கூறவைக்கும் சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்வதற்கான தகுந்த ஆதரமாக உள்ளது.

இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளாதுவிட்டால் சர்வதேச சமூகம் இத்தகைய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த ஆவணப் படத்தை பார்வையிட்ட அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

மாபெரும் பொதுக்கூட்டம்
உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள்-2011
தமிழ் தேசியக் கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக் கட்சி)

- கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன் அவர்கள் தலைமையில்
- தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பா.ம. உறுப்பினருமான கௌரவ இரா.சம்பந்தன் அவர்களுடன்
- தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் கௌரவ வீ.ஆனந்தசங்கரி அவர்கள்
- ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் கௌரவ மனோ கணேசன் அவர்கள்

- பா.உறுப்பினர் - கௌரவ மாவை சேனாதிராசா அவர்கள்
- பா.உறுப்பினர் - கௌரவ சுரேஸ் பிறேமச்சந்திரன் அவர்கள்
- பா.உறுப்பினர் - கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் மற்றும்
- பா.உறுப்பினர் - கௌரவ எம்.ஏ.சுமந்திரன்
- பா.உறுப்பினர் - கௌரவ ஈ.எஸ்.சரவணபவன்
- பா.உறுப்பினர் - கௌர்வ சிவசக்தி ஆனந்தன்
- பா.உறுப்பினர் - கௌரவ விநோதரலிங்கம்
- பா.உறுப்பினர் - கௌரவ பா.அரியநேத்திரன்
- பா.உறுப்பினர் - கௌரவ இரா.செல்வராஜா.
- பா.உறுப்பினர் கௌரவ சீ.லோகேஸ்வரன்
- பா.உறுப்பினர் - கௌரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி

த.தே.கூட்டமைப்பின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், கிளிநொச்சி மாவட்ட உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்கள் கலந்து சிறப்பிக்கின்றனர்.

காலம்:-17.07.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி

இடம்:-அறிவகம் த.தே.கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட பணிமனை

அனைவரும் வருக! வருக!

'வலிதந்தாரை தோற்கடிப்போம்
எம் விதி வெல்லும்! வாக்களிப்போம்'

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

அடகு நகை மீட்க அரிய சந்தர்ப்பம்

அடகு வைத்துள்ள உங்கள் நகைகளை இடம் மாற்றி கூடிய தொகைக்கு மீள வைப்பதற்கு அல்லது மீட்டு விற்பதற்கு நாங்கள் உதவுவோம்.

(சேவைக் கட்டணம் 2% அறவிடப்படும்)

உடனே அழையுங்கள் CALL NOW 0774050936

உல்லாசம் உங்கள் கண்முன்னே...

TILKO JAFFNA CITY HOTEL

No.70/6, K.K.S Road, Jaffna.

Tel: 021 2225969

web:www.cityhoteljaffna.com

e-mail: info@cityhoteljaffna.com




# இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்...

தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறையில் மக்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறே தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தால் மக்களுக்கு எத்தகைய உதவிகள் செய்து கொடுக்கப்பட்டாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதை குறை கூறுகின்றது. புனர்வாழ்வு நிலையங்களில் தடுப்பில் உள்ளவர்களில் 100 பேரை நாம் விடுதலை செய்தால் உடனே கூட்டமைப்பு ஏன் 100 பேரை செய்கிறீர்கள் 101 பேரை விடுதலை செய்தால் என்ன என்று கேள்வி எழுப்புகிறது.

இது மட்டுமல்ல, மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் போதும் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் உதவி வழங்கும் போதும் குறை கூறுகின்றது.

இவ்வாறு குறை கூறுவதை மட்டும் செய்பவர்களால் உங்களது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியாது.

கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு பிரதேச சபைகள் தான் உதவி புரிகின்றன. எனவே உங்களது பிரதேசங்களில் உள்ள கிராமங்களை விருத்தி செய்வதற்கு அரசுக்கு முழு ஆதரவை நீங்கள் வழங்க வேண்டும்.

கடந்த காலத்தில் நாம் இழந்த சுதந்திரத்தை எமது எதிர்கால சந்ததியினர் அனுபவிப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுங்கள். இந்த பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்த குடிநீர் விநியோகம் இன்று (நேற்று) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு மட்டுமல்ல. யாழ்.குடாநாட்டில் பல பகுதிகளிலும் தண்ணீர் தாங்கிகள், நீர்விநியோகத்திட்டங்கள் என்பன ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இவை தற்காலிக திட்டமே இவை தவிர இரணைமடு குளத்திலிருந்து யாழ்.மாவட்டம் முழுவதிற்கும் நீர் வழங்கும் மாபெரும் திட்டத்தை எமது அரசு மேற்கொண்டு வருகின்றது.

மேலும் ஊர்காவற்றுறையில் கடல் நீர் ஊருக்குள் வராது தடுப்பதற்காக கடல் நீர் தடுப்பணை அமைக்கும் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடமாகாணத்தில் பல அபிவிருத்தி திட்டங்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த 30 வருடகால யுத்தம் எமது நாட்டை பொருளாதார நிலையில் பாரியளவில் பின்னடைவு காண வைத்துள்ளது. அதை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை எவர் முடக்க நினைத்தாலும் அது முடியாது. அரசாங்கத்தால் மட்டுமே இந்த நாட்டில் அபிவிருத்திகளை செய்யமுடியும் என்றார். (ந-6)

# சனல் 4 காணொளி சர்வ...

வாழ்ந்து வருவதாகவும் அவர் கொழும் பைத் தளமாகக் கொண்டு இயங்கும் இணையத் தளம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிபடைந்து அமைதியான சூழல் உருவாகின்ற நிலையில் சில தீய சக்திகள் இங்கே பிரச்சினைகளை உருவாக்க முற்படுகின்றன. இவை திட்டமிட்ட சதிகளாகவே இருக்கின்றது. இந்த திட்டங்களுக்கு ஏகாதிய நாடுகளும் ஒத்துழைப்பு வழங்குகின்றன.

தற்போதைய நிலையில் மக்கள் சமாதானமாக வாழ்வதையே விரும்புகின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வடைந்து பொருளாதாரத்தில் அபிவிருத்தியை கண்டு வருகின்ற இந்த நிலையில் தீய சக்திகள் செயற்படுகின்றன.

சனல் 4 ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் காணொளிக் காட்சிகளைப் போன்று இலங்கை அரசாங்கமும் நினைத்தால் அதைவிட பயங்கரமான சாட்சிகளை கொண்ட காணொளிகள் வெளியிட முடியும். விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களையும் படுகொலைகளையும் தொகுத்து வெளியிட முடியும். ஆனால் இலங்கை அரசாங்கம் அவ்வாறு செய்து சிங்கள மக்களின் உணர்வுகளை துண்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இந்த நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டுவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் என்றும் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் முரளிதரன் குறிப்பிட்டுள்ளார். (ந)


சாவகச்சேரியில்

கிருபா லேணர்ஸ்

A-9 வீதி, சாவகச்சேரி

T.P:- 021 492 3202, 021 320 1818

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- தாம் விரும்பிய நேரங்களில் வாகன பயிற்சி வழங்கப்படும்.
- சாரதி அனுமதி பத்திரத்திற்கான மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்) எமது காரியாலயங்களிலே பெற்றுக் கொள்ளலாம்.
- சாவகச்சேரியில் பதிவுகளை மேற்கொள்வோருக்கு அழகிய குடை ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும் (கையிருப்பு உள்ளவரை)

பெண்களுக்கு: நவீன காரில் பயிற்சி வழங்கப்படும் 021 492 3200 (கவிதா)


(5393)

தலைமைக் காரியாலயம்:- 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:- 021 222 4353

கிளை :- கிளிநொச்சி T.P:- 021 228 5505

கிளை :- நெல்லியடி T.P:- 021 300 6550

கிளை :- விசுவமடு T.P:- 021 320 1515






ஆடைகளின் அதிநவீன சோலை

ஸ்ரைல் பார்க்

குடும்பமாய் குதூகலித்திட...

புத்தம்புதிய அழகிய டிசையின்களில் வடிவமைக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்குமான ஆடைகளிற்கு நாடவேண்டிய ஒரே இடம்

STYLE PARK

171, K.K.S,ROAD, JAFFNA.





DHL

உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்

London Rs750

Canada, U.S.A, France, Denmark, Germany, Italy, Norway, Swiss Rs900

220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்

10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலாக திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது.

DHL Online Tracking

TCN Express, 2B,Nelsan place,Colombo-06.

Customer service No.021 222 7835

குறிப்பு

DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.

ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன் கொம்நெற்

இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம். இல.18,பிரதானவீதி,நெல்லியடி. இல.05,திருநகர் பிரதான வீதி,கிளிநொச்சி. இல.46,ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி.




அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.